விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 093 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 08 வியாழக்கிழமை (21.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை



T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## ஜனாதிபதி ரணில் நாளை யாழ்ப்பாணம் விஜயம்

### காணி விடுவிப்பு உட்பட முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்பார்



(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை 22ஆம் திகதி யாழ்ப்பாணத் துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.
இதன்போது இராணுவக் கட்டுப் பாட்டில் உள்ள பொதுமக் களின் காணி விடுவிப்பு 15

## இளவாலை சேந்தாங்குளம் கடலில் மூழ்கி இருவர் உயிரிழப்பு

### ஒருவர் நீரில் மூழ்கிய நிலையில் மற்றவர் காப்பாற்ற முற்பட்ட சமயம் விபரீதம்




(யாழ்ப்பாணம்)
இளவாலை சேந்தாங்குளம் கடற்கரையில் குளிக்கச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந் துள்ளனர்.
நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இதில் வவுனியா செட்டிகுளம் தங்கன்குளம் பகுதியைச் சேர்ந்த தேவகருணதாசா 15

## கலவர பூமியானது கொழும்பு

# ரணில் அரசுக்கு எதிராக மிகப் பெரிய போராட்டம்

- 2 பிக்குகள் உள்ளிட்ட 29 பேர் கைது
- பொலிஸாரால் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகம்





(15ஆம் பக்கம் பார்க்க)

### சபாநாயகர் மீது

## நம்பிக்கை இல்லை

### உதய கம்மன்பில

(கொழும்பு)
சபாநாயகர் தொடர்பாகக் கொண்டிருந்த நம்பிக்கை முற் றிலும் இல்லாமல் போயுள்ள தாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித் துள்ளார்.
நேற்றைய பாராளு 15

### யாழ்.பல்கலையில்

## சர்வதேச இந்து மாநாடு

(யாழ்ப்பாணம்)
"இந்துக் கற்கைகள் பாரம் பரியமும் இலங்கையரும்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம் நடத்தும் இரண் 15

## வெடுக்குநாறிமலையில் நடைபெற்ற பொலிஸாரின் அராஜகங்கள் தொடர்பில்



### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பல்கலை மாணவர்களால் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)
வெடுக்குநாறிமலையில் இடம் பெற்ற பொலிஸ் அராஜகங்கள் தொடர் பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் 15

### குப்பைக்கு வைக்கப்பட்ட தீயால்

## பருத்தித்துறையில் கடையொன்று முழுவதுமாக எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை கிராமக் கோட்டு சந்திப் பகுதியில் தீப் பரவல் காரணமாக சிறிய கடையொன்று முழுவதும் எரிந்து சேதம் அடைந்துள் ளது.
குறித்த தீ விபத்து நேற்று காலை ஏற்பட்டுள்ளது.
வீடொன்றில் குப்பைக்கு வைக்கப்பட்ட தீ அருகில் உள்ள சிறிய கடையொன் றிற்கு பரவியுள்ள நிலையில் தீ விபத்து 15

## அநுர கனடா விஜயம் தமிழர்களையும் சந்திப்பார்

(கொழும்பு)
தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசா நாயக்க கனடாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.
அங்கு இலங்கைத் தமிழர் களையும் சந்திப்பதற்கு ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.
கனடா வாழ் இலங்கையர் களுடனான சந்திப்புகளில் பங்கேற்பதற்காகவே அவர் கனடாவிற்கு விஜயம் மேற் கொண்டுள்ளதாக தேசிய மக் கள் சக்தி அறிவித்துள்ளது.
தேசிய மக்கள் சக்தியின் கனேடிய 15

## வெடுக்குநாறிமலை 3 ஆயிரம் ஆண்டு பழைமையான தமிழர்களின் ஆலயம்

### வழிபடும் உரிமையைப் பறிக்க வேண்டாம் – சிறீதரன் எம்.பி

(கொழும்பு)
வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் 3 ஆயிரம் ஆண்டு பழைமை வாய்ந்தது.
அப்பகுதியை சூழ தமிழர் களான நாகர்களே வாழ்ந்துள்ளதாக வரலாற்று ஆய்வுகள் தெரிவிப்பதாக தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித் தார்.
சபாநாயகர் மகிந்த 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுலேஸ்வரம் குமாரசுவாமி குருக்கள் காலமானார்



(யாழ்ப்பாணம்)

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேச்சர ஆலய ஆதீன கர்த்தா ந. குமாரசுவாமிக் குருக்கள் நேற்று (20) அதிகாலை தனது 71 வது வயதில் இறைபதமடைந்தார்.

குறிப்பாக ஈழத்தின் மூத்த சிவாச்சாரியாரான மறைந்த நகுலேஸ்வரக் குருக்களின் மகனான இவர் கடந்த வருடம் தந்தையின் மறைவின் பின் ஆதீனகர்த்தாவாக இருந்து ஆலயத்தை வழிநடாத்தி வந்தார்.

அண்மைக் காலமாக உடல்நலக் குறைவு காரணமாக சிகிச்சைபெற்றுவந்த நிலையிலேயே நேற்று அதிகாலை சிவனடி சேர்ந்தார். (ம-7,10)

# வெடுக்குநாறி...

யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

தொடர்ந்து உரையாற்றிய சிறீதரன்,

பழமையும் பாரம்பரியமும் கொண்ட ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் அடிவாரத்தில் தமிழ் பிராமிய கல்வெட்டுகள் மற்றும் வட்டெழுத்துகளை காண முடியும்.

வெடுக்குமாறிமலையின் உச்சியில் ஆதிலிங்கேஸ்வரம் என்ற சிவன் ஆலயம் அமைந்துள்ளது.

ஐந்து தலைமுறைகள் கடந்து அங்கு வாழும் மக்கள் இந்த ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். 1988ஆம் ஆண்டு அப்பகுதி இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த போது, அவர்களது பாதுகாப்புடன் அங்கு மகாசிவராத்திரி இடம்பெற்றிருந்தது.

1990களின் பின்னர் விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் அங்கு மகாசிவராத்திரி இடம்பெற்று வந்தது.

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்தப் பின்னரும் அங்கு குடியேறிய மக்கள் 2010ஆம் ஆண்டுமுதல் ஆதிலிங்கேஸ்வரரை வழிபட்டு வந்துள்ளனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் இந்த ஆலயத்தை கைப்பற்ற பௌத்த துறவிகள் செயல்பட்டு வருகின்றனர்.

2018ஆம் ஆண்டு முதல் இங்கு தமிழர்களின் வழிபாட்டு உரிமையை பறித்து வருகின்றனர். அதன் பின்னர் இங்கு வழிபடும் உரிமையை பறிக்கும் வழக்கு 2019இல் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டது. இதன்மூலம் ஆலய பூசகர் உட்பட பலர் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

தொல்பொருள் திணைக்களத்தாலும் 2019ஆம் ஆண்டு வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், ஆலயத்தின் அனைத்து விக்கிரகங்களும் அடியோடு அகற்றப்பட்டமை 2023ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது.

புதரொன்றில் எறியப்பட்டிருந்த சிவலிங்கத்தை மீண்டும் அங்கு பிரதிஷ்டை செய்து பிரதேச மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இவ்வாண்டு மகா சிவராத்திரியை சிறப்பாக செய்ய முற்பட்ட போது பூசகர் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

வழிபாடுகளை தடுக்க 500 இற்கும் மேற்பட்ட கலகமடக்கும் பொலிஸார் இங்கு நிறுத்தப்பட்டு மக்களை அடக்க முற்பட்டனர். பக்தர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலையும் நடத்தினர். பொலிஸார் இங்கு மனிதாபிமானமற்ற விதத்திலேயே நடந்துகொண்டனர்.

இந்த சம்பவத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். இது 3,000 ஆம் ஆண்டு பழமை வாய்ந்த தமிழர்களின் ஆலயமாகும்.

இந்த நாட்டில் வாழ்வதற்கான உரிமை இல்லையென்றால் எவ்வாறு நல்லிணக்கம் பற்றி சிந்திக்க முடியும். நல்லிணக்கம் என்பது பேச்சளவில் இருப்பது அல்ல. ஒரு நாட்டின் மக்களை அனுசரிப்பதில் தான் அது தங்கியுள்ளது.

ஆகவே, வெடுக்குநாறிமலையில் உள்ள மக்கள் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபட எந்தவொரு தடையும் இருக்க கூடாது.

ஜனாதிபதி மற்றும் தொல்பொருள் திணைக்களம் இதற்கு உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும் என்றார். (ம-7,10)

# புகையிரதத்தில் மோதுண்ட கர்ப்பவதி ஆசிரியை மரணம்

(ரத்கம)

கண்டியில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த புகையிரதத்தில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக ரத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரத்கம, ஓவகந்த பிரதேசத்தில் இந்த ஆசிரியை விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புஸ்ஸ, கஞ்சில பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே நேற்று (20ஆம் திகதி) பிற்பகல் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

உயிரிழந்த ஆசிரியை கர்ப்பவதி எனவும் அவர் எதற்காக தற்கொலை செய்து கொண்டார் என்பது குறித்து இது வரை தெரியவரவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த ஆசிரியையின் சடலம் பிரேத பரிசோதனைக்காக காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

# யாழ். போதனாவில் கஞ்சா பீடியுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் கஞ்சா கலந்த பீடியுடன் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளி ஒருவரை பார்வையிட வந்தவரை வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பரிசோதித்த போது கஞ்சா கலந்த பீடி வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.கைதானவர் யாழ்ப்பாணம் புறநகர் பகுதியை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது. (ம-7,10)




**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**
**உளவளத்துணை டிப்ளோமா கற்கைநெறி 2023/2024**
**(அணி - I)**

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களிலும் சித்தி.
2. அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய வேறு ஏதேனும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| **கற்கைநெறிக் காலம்** | - ஒரு வருடம் (இரண்டு அரையாண்டுகள்-வார இறுதி நாட்கள்) |
| **மொழிமூலம்** | - தமிழ் |
| **கற்கைநெறிக் கட்டணம்** | - ரூபா 55,000.00 |
| **விண்ணப்பப்படிவக் கட்டணம்** | - ரூபா 500.00 |

விண்ணப்பப் படிவத்தினை www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தினூடாக தரவிறக்கம் செய்து, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் மக்கள் வங்கிக்கிளை கணக்கிலக்கம் **890012520003458** இற்கு விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணம் ரூபா. 500.00 இனைச் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டினை இணைத்து, உதவிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்குத் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உளவளத்துணை டிப்ளோமா கற்கைநெறி-2023/2024 (அணி I)" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 15.04.2024**

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
20.03.2024

(C-8584)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. ஜெயராஜசிங்கம் ஜெயசுதன்
முதுகல்விமாணி (M.Ed)

எமது பாடசாலை தகவல் தொடர்பாடல்துறை ஆசிரியர் **திரு.ஜெயராஜசிங்கம் ஜெயசுதன்** அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் 38 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி(M.Ed) பட்டத்தைப் பெற்றதையிட்டு மகிழ்வதுடன்அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

Congratulations வாழ்த்துவோர் :
கல்லூரிச் சமூகம் **யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

(C-8582)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் 16.03.2024 அன்று நடைபெற்ற 38 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கிறிஸ்தவ கற்கைகளில் முதுமாணி (2nd upper) பட்டத்தைப் பெற்றுக்கொண்ட எமது பாடசாலை ஆசிரியர்

திருமதி மேரிலின்சியா மயூறன்

Nat.Dip.in Teaching (christianity), B.A., PGDE, Master of Christian studies (MCS 2 nd upper)

அவர்களை வாழ்த்தி மகிழ்வதோடு அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

Congratulations

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம்

(161)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதியளவு நீர் அருந்தாவிட்டால் செல்கள் செயலிழக்கும் அபாயம்!

## சுகாதார அமைச்சகம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**தற்போது நிலவும் வெப்பம் காரணமாக உடலுக்குத் தேவையான நீர் பற்றாக்குறையால் செல்கள் செயலிழக்கும் அபாயம் இருப்பதாக சுகாதார அமைச்சகத்தின் வைத்திய நிபுணர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.**



ஆகவே வயது முதிர்ந்த ஒருவரின் உடல் செயற்பாட்டிற்கு ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு லீற்றர் தண்ணீர் தேவை என அவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு இவ்வாறு நீர் கிடைக்காத பட்சத்தில் நீரிழப்புக்கு ஆளாகி உடலில் செல்கள் செயலிழந்துவிடும் என்றும் எனவே தேவையான அளவில் நீரை பருகுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், வரலாற்றில் ஏற்பட்ட காலநிலை மாற்றங்களுடன் ஒப்பிடுகையில் கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இருந்த வெப்பநிலையை விட இந்த ஆண்டு வெப்பநிலை அதிகரித்துள்ளது.

எனவே கடும் வெப்பமான காலநிலை காரணமாக சிறு பிள்ளைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டுமென சிறுவர் வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அதன்படி, நீரிழப்பைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பெற்றோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நாடு முழுவதும் மழையற்ற காலநிலை மே மாதம் வரை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

## சீனாவிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி

(கொழும்பு)

சீனாவிடம் முன்பதிவு செய்யப்பட்ட பெரிய வெங்காயம் இன்னும் ஒரு சில நாட்களில் நாட்டிற்கு கிடைக்கப்பெறுமென வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வெங்காயத் தொகை நாட்டிற்கு கொண்டுவரப்பட்டதும் உள்நாட்டு சந்தையில் வெங்காயத்தின் விலை குறைவடையுமென வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். (நி-5)

## 'யுத்திய'வில் 913 பேர் கைது

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல் காரர்களை கைது செய்யும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசேட சுற்றிவளைப்பில் 883 ஆண்களும் 30 பெண்களும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 54 பேரை மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்க நீதிமன்ற அனுமதி பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5)


# ஈழத்து மாமுனிவர் யோக சுவாமிகளின் 60 ஆவது குருபூசை

இப்புவியில் சமீபகால வரலாற்றில் எளிமையானமுறையில் ஆனால் ஆழ்ந்த தெய்வீக ஊற்றாகத் திகழ்ந்த ஞானிகளில் சிவயோக சுவாமிகள் முதன்மையானவர் என்றால் மிகையாகாது. சிவதொண்டும் சிவதியானமுமே அவரின்போதனைகளின் சாராம்சம். அது தன்னைத்தானே விளங்கி தன்னைத்தானே உணர்ந்து சிவதொண்டையும் சிவதியாகத்தையும் மறவாது சிவசிந்தனையுடன் மனிதாபிமானமாக ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாக அமைகின்றது.

இலங்கையில் மாவிட்டபுரம் கிரா மத்தில் 1872 ஆம் ஆண்டில் சிவயோகர் சுவாமிகள் பிறந்தார். நல்லூர் திருத்தலத்தில் தனது குருவான செல்லப்பா சுவாமி களைத் தன் முப்பத்தைந்தாவது வயதில் சந்தித்தார். அந்த முதற் சந்திப்பே லௌகீக வாழ்வில் உலக ஆர்வமெல்லாம் துறந்து ஆன்மீக வாழ்வில் சுவாமிகளை ஈடுபட வைத்தது. தனது குருவின் வழிகாட்டலில் மிகவும் கடுமையான ஆன்மீக கட்டுப்பாடுகளுக்குள் தன்னை ஆழ்த்திக் கொண்டார். செல்லப்பாசுவாமிகள் 1915 இல் மகாசமாதி அடைந்தார். யோகர் சுவாமிகள் கொழும்புத்துறையில் ஒருசிறுகுடிசையில் தனது வதிவிடத்தை அமைத்துக் கொண்டார். அங்கு அடிக்கடி தியானத்தில் ஈடுபடுவார்.

ஆன்மீகப் பிரார்த்தனையில் மூழ்கி உலக வாழ்வை மறந்து வெள்ளை உடையணிந்து எளிமையாக வாழ்ந்தார். விவசாயிகள் முதல் இராஜதந்திரிகள் வரை சுவாமிகளது இறைவனுடனான சரணாகதி உறவை அறிந்து சுவாமிகளின் குடிசையைத் தேடிவந்து சுவாமிகளின் திருவடியில் ஆசி வேண்டி நின்றனர். அவரது உள்ளார்ந்த ஆன்மீக வழிபாட்டை "சிவதொண்டு சிவதியானம்" என்ற இருசொற்களில் எடுத்துரைக்கலாம். மேலும்இதயத்தை உருக்கும் அன்பு சொற்களாலோஅம்புபோல் சுடும் கடின வார்த்தைகளாலோஅவரின் அருள்மிகு பணிப்புகளாகவேமதிக்கப்பட்ட வார்த்தைகளில் வரும் சூட்சுமசக்தியை இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், முஸ்லீம்கள், ஏன் நாஸ்திகர்கள் கூட சுவாமிகளை நாடி நின்றனர். தமிழர்கள், அமெரிக்கர்கள், கனேடியர் மற்றும் ஐரோப்பியர், அவுஸ்திரேலியமக்கள் என எத்தனையோ பேரின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியைச் சிறப்புற வைத்து சிவயோகர் சுவாமியாரின் வாழ்வு.

எனது குருவான அமெரிக்கா ஹவாய் ஆதீனத்தின் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளும்அவரின் சீடர்களில் ஒருவர். வட அமெரிக்காவில்முதலாவது இந்து ஆலயத்தை குருதேவர் நிறுவியதுடன் ஓர் ஆதீனத்தையும் ஹவாயில் அமைத்து மேற்கு உலகில் முதலில் சைவசமயத்தைப் பரப்பினார். எனது குருநாதரைஅப்பணியில் தூண்டிவிட்ட பெருமை யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிக்கே உரியது.



யாழ்ப்பாணத்தில் அறுபது வருடங்களுக்கு மேலாக தனிப் பெரும் தவஞானியாக கொழும்புத் துறையில் ஒரு சிறுகுடிசையில் வாழ்ந்து 1964 ஆம் ஆண்டு பங்குனி மாத ஆயிலிய நட்சத்திரத்தில் மகா சமாதியடைந்த சிவயோகர் சுவாமிகளின் வாழ்வும் போதனைகளும் அவரை உலகளாவிய பல இன மொழி பேசும் அடியவர்களாலும் போற்றிப் பேணப்படுகின்றது. சுவாமிகள் அகவுலகில் இருந்து தனது அடியவர்களை நெறிப்படுத்தி வருகின்றார். சுவாமிகளின் சீடர் கள்மூலமாக ஈழத்துச் சித்தர் பாரம்பரியம் இன்றும் இப்புவியில் நிலைத்திருக்கின்றது.

**"யோக குருநாதன் திருவடிகள் போற்றி"**

**ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்.**

(சி-8579)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் கொமர்சல் வங்கி அணி சம்பியன்

சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெற்ற வங்கிகளுக்கு இடையிலான துடுப்பாட்டச் சுற்றுத் தொடரில் கொமர்சல் வங்கி அணியினர் சம்பியனை தம்வசப் படுத்தியிருந்தனர்.

அதேவேளையில் இரண்டாம் இடத்தினை சம்பத் வங்கியினர் பெற்றுக்கொண்டனர்.

தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக கொமர்சல் வங்கி அணியைச் சேர்ந்த மைடினும், சிறந்த பந்து வீச்சாளராக கொமர்சல் வங்கி அணியைச் சேர்ந்த சுஜியும், சிறந்த வீரராக சம்பத் வங்கி அணியின் சஜியும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான உதவி மாவட்ட ஆளுநர் றோட்டரியன் ஜோய் பிஜசீலின் கலந்து சிறப்பித்திருந்தார்.(நி-5-30)





## 'லடிஸ்லாஸ்' ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி பாடும் மீன் அணி அடுத்த சுற்றுக்கு தகுதி

பருத்தித்துறை லீக்கின் அனுமதியுடன் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் அமரர் வெ.லடிஸ்லாஸ் ஞாபகார்த் தமாக நடத்தும் அணிக்கு 9 நபர் கொண்ட வடமாகாண ரீதியாக நடத்தும் உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியின் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் பாடும்மீன் அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் அணி மோதிக் கொண்டது.

போட்டியின் ஆட்டநேர முடிவில் பாடும்மீன் அணி 7-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக பாடும்மீன் அணியின் வீரர் கீதன் தெரிவு செய்யப்பட்டார். (நி-5-106)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3067

Search for people, places and things

### விதுரன்




### மதுவந்தி




### சியானி




### திவாகரன்




### ராகவி




### மாதுளன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் தாமதமாகும் அபாயம்

# பஃப்ரல் அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

**தேர்தல் முறைமை திருத்த யோசனைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படாவிட்டால், தேர்தல் தாமதமாகும் அபாயம் உள்ளதாக பஃப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.**

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள பெஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தேர்தல் முறைமை திருத்தப்பட்டு எல்லை நிர்ணய பணிகள் துரித கதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

தற்போது, தேர்தல் முறைமையில் திருத்தம் செய்வது தொடர்பான யோசனை அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது பாராளுமன்றத் தேர்தல் முறையை கலப்பு விகிதாசார முறைக்கு கொண்டு செல்வது பற்றியதாகும் என்றும், எனவே பாரளுமன்றத் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்யப்படுவதாயின், அதில் ஒரு அங்கமாக வரும் எல்லை நிர்ணயத்தை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக இணக்கம் காணப்பட வேண்டும்.

இருப்பினும், ஏதோ ஒரு வகையில் எல்லை நிர்ணயம் முடிவுக்கு வரவில்லை என்றால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்குள் தேர்தல் முறையில் திருத்தம் செய்யப்பட்டாலும் தற்போதுள்ள தேர்தல் முறையிலேயே தேர்தல் நடத்தும் அதிகாரத்தை தேர்தல் ஆணைக் குழுவுக்கு வழங்கும் திருத்தத்தை இந்த வரைவில் கட்டாயம் சேர்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இல்லையெனில், தேர்தல் முறை திருத்தப்பட்டு சட்டம் இயற்றப்பட்டாலும் எல்லை நிர்ணயம் முடிவடையாமல் போகலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)


**பதவி வெற்றிடம்**

- **கணனி தமிழ் ரைப்பிங்**
- **கணனி பக்க வடிவமைப்பு**

அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிலுனர்கள் இருபாலாரும்

தொடர்புகளுக்கு: 076 097 3121

வலம்புரி
இல.191, பிரவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

பொதுமுகாமையாளர்.

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு இரவு நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

வயது : 30 - 65

(யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை)

தொடர்புகளுக்கு

**076 097 3121**


## கல்வி அமைச்சு-மைக்ரோசொப்ட் நிறுவனம்

# விசேட ஒப்பந்தம் கைச்சாத்து



(கொழும்பு)

தரம்8 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பப்பாடத்தில் செயற்கை நுண்ணறிவு விடயப்பரப்பை உள்வாங்குவதற்கான முன்னோடித் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கல்வி அமைச்சுக்கும் மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்கும் இடையில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் முன்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்றும் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, பாடசாலை பாடத்திட்டத்தில் செயற்கை நுண்ணறிவை உள்வாங்குவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக ஜனாதிபதியிடம் மைக்ரோசொப்ட் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர்.

தரம் 8 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பப்பாடத்தில் செயற்கை நுண்ணறிவு விடயப் பரப்பை உள்வாங்குவதற்கான முன்னோடித் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இணங்க கல்விச் செயற்பாடுகளை தொழில்நுட்பமுறையில் முன்னெடுப்பதற்கான உதவிகளை மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் குழுவொன்று வழங்கவுள்ளது.

20 மாவட்டங்களில் 20 பாடசாலைகளைத் தெரிவு செய்து தரம் 8 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான இந்த முன்னோடி திட்டத்தை செயற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை 2025ஆம் ஆண்டிலிருந்து முழுமையாக நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார். (நி-5)

# இராசிபலன்

21.03.2024
பங்குனி 08, வியாழக்கிழமை
துவாதசி முழுவதும்

ஆயிலியம் பின்னிரவு 3.36 மணிவரை
சுபநேரம் -7.47-9.17 மணிவரை
இராகுகாலம்-1.47-3.17 மணிவரை
சித்தாமிர்தம், யோகர் சுவாமிகள் குருபூசை

சந்திராஷ்டமம்
மூலம்

**வளவன்**

**மேஷம்** வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**ரிஷபம்** வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் கூடும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், நீண்ட நாளைய தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், தொட்ட காரியங்கள் கைகூடும், உற்சாகமான நாள்.

**கடகம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களை பாதியில் விட்டு விடுவீர்கள், ரோக பயமுண்டு.

**கன்னி** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொறுமையால் பெருமை சேரும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** இல்லத்துக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், முன்னேற்றகரமான நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**தனுசு** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், தொழில் வளர்ச்சிக்கு தடையாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு, சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாடு சிறப்பினைத் தரும், நட்பு வட்டம் விரிவடையும், விடாமுயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**கும்பம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்காக அறிகுறி தோன்றும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**எதிலும் எப்போதும் மிகுந்த கவனத்துடன் இருந்தால் வெற்றி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் குருவின் சரிதம் அற்ற திரம்



யோகர் சுவாமிகளை நேரில் தரிசித்தவர்களும் கற்றும் கேட்டும் அறிந்தோர்களும் அவரைப்பற்றிக் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளனர். அவ்வெழுத்துக்கள் மண்ணில் நடமாடிய யோக சுவாமிகளைப் பற்றியே பெரும்பான்மையாகக் கூறின. யோகசுவாமிகளின் மானுடப் போர்வைக்குள் அவரின் உண்மைச் சிவசொரூபம் மறைந்திருந்தது. அதனைக் கண்டு எழுதும் ஆற்றல் படைத்தோர் எவரும் இருக்கவில்லை. இதனைக் குறித்தே சுவாமிகள் "எங்களைப் பற்றி எழுதக் கூடியவர்கள் இன்றும் இல்லை இனி என்றும் வரப் போவதுமில்லை" எனக் கூறினர்.

ஆயின் யோகர் சுவாமிகள் தன்னைத் தன்னால் அறிந்தவர். அவர் தன்னை அறிந்து தெளிந்து உணர்ந்து அவ்வுண்மையில் உறுதியுற்றிருந்தவர் அவர். அந்த உண்மையில் தூண் போன்று இருந்தார். அவரால் தன்னைப் பற்றி எழுத முடியும் ஆனால் அந்தத் தன்னுண்மையிலே பேர் ஊர் இல்லை, பிறப்பு இறப்பு இல்லை, இளமை முதுமை இல்லை, போக்குவரவில்லை, காலதேச வர்த்தமானமில்லை, நீ நான் இல்லை, நல்லது கெட்டதில்லை, நேற்று இன்று நாளை என்பன இல்லை, ஆதலால் இவற்றைப் புனைந்து எழுதும் சரிதம் என்பதும் அவருக்கு இல்லை. சரிதம் இல்லை எனினும் அவர் "திரம் இது பொருள்" எனும் உண்மையில் திடம் பெறநின்றார். அதில் அவர் குன்று போல் நின்றார். நின்ற நிலையிற் பிரியாதிருந்தார். அந்தத் திரத்தன்மை அவரது திருவாய்மொழிகளில் தெளிவாகத் தெரிகிறது. அத்திரத்தன்மையில் மூன்று இயல்புகளைக் கண்டறிய முடிகிறது. அவற்றுள் ஒன்று அவர் தானாய் எங்குஞ் சென்றிருந்தார் என்பது. எங்கும் சென்றிந்திருந்தவரெரினும் ஏதொன்றிலும் தட்டாது முட்டாதிருந்தார் என்பது இன்னொன்று. எல்லாவற்றுக்கும் அப்பால் தானே தானாய்த் தனியே சுகமாய் இருந்தார் என்பது மூன்றாவதான முடிந்ததில்லை.

"தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே தானாய் எங்கும் செறிந்திட வேண்டுமே" என அவர் தனது குருவிடம் வேண்டுவதான ஒரு வாசகம் நற்சிந்தனையில் உளது. இவ்வேண்டுதல் பலித்ததென்பதில் ஐயமில்லை. அவர் எங்கும் செறிந்த தன் உண்மையை அறிந்திருந்தார். அந்த ஞான விசரில் "அங்கும் இங்கும் எங்கும் நான் அதை அறியும் விசரன் நான்" என அவர் பாடுகின்றார்.

எங்கள் ஆசான் அருள்மொழிகளில் ஓரிடத்தில் "எல்லாருள்ளும் நான் இருக்கிறேன் என்பதை எல்லோராலும் விளங்க முடியாது. என்று சுவாமிகள் கூறியிருக்கிறார். இதனை எல்லோரும் விளங்கும் வண்ணம்" இப்பொழுது நான் எங்கும் இருக்கிறேன் என்பது தெளிவு ஆயினும் இப்படி ஒரு குடிசையில் இந்த உடலை வைத்திருக்க வேண்டியதே என்ற வண்ணம் அவர் கூறியதுமுண்டு. அவரது மானுடப் போர்வை கொழும்புத்துறைக் கொட்டிலில் உறைந்தது. உண்மையான அவரோ "எங்கும் என்றன் தங்கும் வீடு" என்று எங்கும் செறிந்திருந்தார். எங்கும் செறிந்த ஆனந்தக் களிப்பில் அவர் பாடிய பாடலொன்றில்

எல்லாம் என் கைவசமாச்சே - சிவசிவ
எடுத்த பிறப்பின் பயன் சித்தியாச்சே
உல்லாசமாய்த் திரிய லாச்சே
உலகெல்லாம் எனக் குறவாகிப் போச்சே

எனப்பாடுகின்றார். "என்னையன்றி வேறொன்றுமில்லை" என்று சொல்லும் வண்ணமாக மண்ணும் விண்ணும் அல்லும் பகலும் அதுவும் இதுவும் சொல்லும் பொருளும் என எல்லாவற்றிலும் செறிந்திருந்தார். எங்கும் செறிந்திருந்ததுடன் எல்லாவற்றையும் ஆளவல்லவராயுமிருந்தார். அவர் "நீயே உலகத்துக்கு ஏகசக்கராதிபதி" என்று உபதேசித்த போது தாம் அவ்வாறிருக்கும் தன்மையினாலேயே அதனை உறுதியாகக் கூறினார்.

சுவாமிகள் விண்ணும் மண்ணுமாகி நின்ற போதும், அவனியெல்லாம் ஆள்பவராயிருந்தபோதும், ஈதொன்றிலும் தட்டாது முட்டாது ஏதுமொன்றற நிற்பவராய் இருந்தார். அவர் உடம்போடிருந்தபோதும் உடலுபாதைகளால் தாக்குப்படாதவராயிருந்தார். உலகில் வாழ்ந்த போதும் உலகின் நன்மை தீமை அறியாதவராயிருந்தார். "இந்த உலகையும் உடலையும் மெய்யென நம்பி வாழ்பவர்கள் நீங்கள். நான் இந்த உடலையும் உலகையும் பொய்யெனத் துணிந்து பொருந்திய வண்ணம் வாழ்கிறேன்" என்ற வண்ணம் அவர் எழுதியிருக்கிறார். அவர் சாதி சமயம் என்னும் சங்கடத்துக்குள்ளாகாதவர் "பஞ்சம் படைவந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி" யென்றும் "பரிதிகாயில் வாடாது பவனம் வீசில் வீழாது பரவை சூழில் ஆழாது" என்றும் அவரது திருவாய் மொழிகள் உள்ளன.

முண்டகமலர்ப்பதம் கண்டேன்
மூவருந் தேவரும் முளைத்ததும் கண்டேன்.
உருகி உருகி உணர்ந்தேன் - சிவ சிவ
ஒன்றையும் காணாது நின்றேன்
மருமமிது பெரும் மருமம்
மகத்துக்களாலும் சொல்லொணா மருமம்

எனப்பாடுகிறார்.

இவ்வாறு பாடும் அவர் தமது குரு மாதவரும் அறியாத மகத்தானாக நின்றது போலவே தாமும் நின்றார். அவர் முண்டக பலர்ப்பதம் கண்ட திறத்தைப் "பாதாரவிந்தம் பரவிக்கண்டேனே என்றும் பாடுவார். கண்ட திறத்தைக் கண்ட பத்து" எனும் பதிகத்தில் விரிவாகப் பாடி இறுதிப்பாடலில்

இரவு பகலற்ற ஏகாந்தவீட்டில் எனைப்
பரவிப் பணியவைத்தபரமன் குருவாகிச்
சரணகமலமலர் தலைதனிலே வைத்தவனைக்
குரவு மலர் குறையாக் குளிர் நல்லை கண்டேனே

எனப் பாடிப்பரவுகிறார்.

இப்பாடலிலே பரம்பொருளே குருவாக வந்து பாத மலரை யோகரின் சிரசில் சூட்டி ஏகாந்த வீட்டில் பரவிப் பணிந்திருக்கச் செய்தமையைக் காணக் கூடியதாகிறது. இந்த ஏகாந்த வீடு ஓங்கார மேடையின் மேல் இருக்கின்றது. இவ்வீட்டின் பள்ளியறையிலே நீங்காச் சிவகதியில் அவர் நிலைத்திருந்ததை

ஓங்காரக் கம்பத்தின் உன்னத மேடையில்
பாங்கான வீட்டுப் பள்ளியறையில்
தூங்காத திறவுகோல் கொண்டு திறந்தால்
நீங்காச் சிவகதி நிச்சயமாமே

என அவர் திடம்படக்கூறுகிறார்.

அவர் பட்டப்பகல் போல் ஒளிரும் வெட்டவெளி ஒன்றையே காண்கிறார். அவ்வெளி "செஞ்சரண (திருவடி) நிலவு விரிந்திருப்பதால் விளைந்தது. நிலவொளி போன்று குளிர் செய்வதாயிருப்பது. இந்த தண்ணென்ற சாந்த பத நிலையில் திருவடியின் செய்யநடம் கண்டு களிப்பவராகவும் துய்ய அறிதுயில் புரிபவராகவும் உள்ளார். "எங்கள் வளநாடு" என்னும் பாடலில் இவற்றை விரிவாக விவரணஞ் செய்கிறார். இந்த வள நாட்டைக்கட்டு நமன் கிட்டுவதில்லை, கன்று மன வெப்பில்லை, துன்பக்களை இல்லை, இன்பப்பயிர் ஓங்கி வளர்கிறது. தேடித்தேடித் திரிந்தலைந்து நான் சிந்தை தெளிந்தேனே என்ற இனிய கீதத்தில் யோக சுவாமிகளது உயர் நலம் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. இக்கீதத்திலே அவர்,


சிந்தையிற் கண்டே என் தீவின் போச்சுது
சிவபெருமான் தன் இணையடி வாய்த்தது

எனத் தான்பெற்ற பெரும் பேற்றைப் பாடுகிறார்.

இவற்றைப் போன்று தனது உயர்வற உயர்ந்த நிலையை நற்சிந்தனையில் பாடியிருக்கின்றார். இவற்றில் சரிதம் இல்லை திரம் உண்டு.

**சிவதொண்டன் சபையினர்,**
**யாழ்ப்பாணம்.**

# தொடரும் மீனவர் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ். மாவட்ட மீனவர்கள் நேற்று புதன்கிழமை காலை மீண்டும் யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ்.மாவட்ட மீனவர்கள் நான்கு பேர் முன்னெடுத்துள்ள உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

யாழ்.மாவட்ட கிராமிய கடற்தொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ் மாவட்ட கடற்தொழில் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து நேற்றைய முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை முதல் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் உணவு தவிர்ப்பு போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு ஆதரவு தெரிவிப்பதற்காக வருகைதந்த மாதகல் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் இணைந்து பேரணியாக யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் முன்பாக சென்று கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சிறிது நேர போராட்டத்தின் பின்னர் மீனவர்கள் மீண்டும் உணவு தவிர்ப்பு போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர் (நி-5-33)

## தொழில் முயற்சியாண்மை தொடர்பாக

# மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களிடையில் தொழில் முயற்சியாண்மை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கவிதை, கட்டுரை, ஓவியம், பாடல் உருவாக்கம் மற்றும் குறும்படம் தயாரித்தல் என்ற விடயங்களில் கடந்த ஆண்டில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரிவினால் போட்டிகள் நடத்தப்பட்டது.

கைத்தொழில் மற்றும் கல்வி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இப்போட்டி நிகழ்வில் யாழ்.மாவட்டத்தை சேர்ந்த முன்னணி பாடசாலைகள் பல தேசிய மட்டத்தில் விருதுகளை பெற்று பெருமை சேர்த்துள்ளன.

நிலக்சி சிறிதரன் (யாழ் வேம்படி மகளிர் கல்லூரி) - கட்டுரை (தமிழ்மொழி மூலம்) முதலாம் இடம், யதுர்சா பகீரதன் (யாழ் வேம்படி மகளிர் கல்லூரி) - கட்டுரை இரண்டாம் இடம், இராஜசிறிக்காந்தன் சஜிநாத் (யாழ்.பரியோவான் கல்லூரி) - கட்டுரை (ஆங்கில மொழி மூலம்) முதலாம் இடம், கேதீசன் கஜலக்சன் (பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி) - கட்டுரை (தமிழ்மொழிமூலம்) முதலாம் இடம், கேம்சிதா சுரேஸ்குமார் (கொக்குவில் இந்து கல்லூரி) - கட்டுரை (தமிழ்மொழி மூலம்) மூன்றாம்இடம், வேணிஜா பகீரதன் (வேலணை மத்திய கல்லூரி) - கட்டுரை (தமிழ் மொழி மூலம்) மூன்றாம் இடம், தர்மினி சோதிநாதன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) - பாடல் ஆக்கம் (தமிழ்மொழி மூலம்) மூன்றாம் இடம் இவர்களுக்கான பரிசில்கள் வழங்கல் நிகழ்வு நாளை 22 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு கொழும்பு தாமரை தடாக கட்டடத்தில் ஜனாதிபதியால் கல்வி அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் முன்னிலையில் வழங்கப்படவுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தில்

# 32 மாணவர்கள் இடைவிலகல் 29 பேர் மீள் இணைவு

## சிறுவர் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டின் முதலாம் காலாண்டுக்கான சிறுவர் அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இதன்போது, மாவட்ட ரீதியில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி தொடர்பாக அதிக் கவனம் செலுத்தபட்டுள்ளது.

மேலும் பாடசாலை மாணவர்களின் வரவு ஒழுங்கின்மை, இடைவிலகல் தொடர்பாக ஆராயப்பட்டு மாணவர்களின் மீளிணைப்பு செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ் வருடத்தில் 32 பிள்ளைகள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ளதாகவும், அவர்களில் 29 பிள்ளைகள் மீளிணைக்கப்பட்டுள்ளதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட தாய் சேய் மருத்துவ நிபுணர், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவின் உத்தியோகத்தர்கள், துறைசார்ந்து பணியாற்றுகின்ற அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், உளநலவளத்துறை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-5-315-100)

# சிறுபோக நெற்செய்கைக்காக முத்துஐயன்கட்டுக்குளம் திறப்பு

(அக்கராயன் )

முல்லைத்தீவு முத்துஐயன் கட்டுக்குளம் வான் பயிர்கள் மற்றும் கால்நடைகளின் குடிநீருக்காக கடந்த திங்கட்கிழமை திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி அன்று முத்துஐயன்கட்டுக்குள விவசாயிகளுடனான கலந்துரையாடலின் போது விவசாயிகளினால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளை உடனடியாக தீர்க்கும் முகமாக முல்லைத்தீவு பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் முத்தையன் கட்டு விவசாய அமைப்புக்களுடன் நீர்பாசன பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்பவியலாளர் பங்குபற்றலுடன் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டு அதில் விவசாயிகளின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அனைவரது சம்மதத்துடன் ஒப்பந்த வேலைகள் நடைபெறும். வாய்க்கால்களிற்கு பாதிப்பில்லாத வண்ணம் திறந்து விடப்பட்டுள்ளது.(நி-5-350)


## பணியாளர்கள் தேவை

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயத்தில் பின்வரும் பதவி நிலைகளிற்கு பணியாளர்கள் தேவை.

1. இலிகிதர்.
2. களஞ்சியப் பொறுப்பாளர்.

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை 26.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "தலைவர், அறங்காவல் சபை, ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில், துன்னாலை வடக்கு, புலோலி" எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேர்முகத் தேர்வுக்கான திகதி பின்னர் தங்களுக்கு அறியத்தரப்படும்.

(சி-8580)

ரா. விஷ்ணுகாந்தன்
(நிர்வாக அறங்காவலர்/பொருளாளர்)
வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்


# வவுனியா வைத்தியசாலையில் மருந்தாளர்கள் பணிப்புறக்கணிப்பு

## நோயாளர்கள் அவதி



(வவுனியா)

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் மருந்தாளர்கள் பல்வேறு கோரிக் கைளை முன்வைத்து நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பதவி உயர்வு மற்றும் புதிய நியமனம் ஆகியவற்றில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து மருந்தாளர்கள் சுகயீன விடுமுறையில் ஈடுபட்டனர்

இப் பணிப்புறக் கணிப்புப் போராட்டம் காரணமாக கிளினிக் வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றிக்கு வருகை மேற்கொண்ட நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர். (நி-5-250)

# தபாலகம் அமைத்து தருமாறு கிராம மக்கள் கோரிக்கை

(முறிகண்டி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம், அறிவியல், மலையாளபுரம், கிருஷ்ணபுரத்தை மையப்படுத்தி தபாலகம் அமைக்க பிரதேச மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

சுமார் 4500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ள மேற்குறித்த கிராமங்கள் தபால் சேவையை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அறிவியல்நகர் பகுதியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், மத்திய வங்கியின் வடமாகாண பிராந்திய அலுவலகம், தெங்கு அபிவிருத்தி சபையின் வட மாகாண அலுவலகம், வனலாகா திணைக்களம், ஆடைத் தொழிற்சாலைகள் உள்ளிட்ட முக்கிய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அமைந்துள்ளன. அத்துடன், மேற்குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களும் தபால் சேவையை பெற்றுக்கொள்வதற்கு அதிகமாக கிளிநொச்சி தபாலகத்தை அணுக வேண்டி உள்ளது. இதற்காக போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவாக காணப்படுவதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

முதியோர் கொடுப்பனவு, அரச மாதாந்த கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள கிளிநொச்சி தபாலகத்திற்கு செல்ல வேண்டி உள்ளதாக தெரிவிக்கும் மக்கள், சில சமயங்களில் பணத்தை பெற்றுக் கொள்ள முடியாமல் திரும்பும் நிலையும் ஏற்படுவதாக தெரிவிக்கின்றனர்.எனவே பாரதிபுரம். அறிவியல் ,மலையாளபுரம்,கிருஷ்ணபுரத்தை மையப்படுத்தி தபாலகம் அமைத்துத் தருமாறு இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-100)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1994 - இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 27<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: A/L, TO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14221 | பிறப்பு-1997 -இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா- 75 1/2<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்:. Bsc,MBA,Finance Executive<br>எதிர்பார்ப்பு:தனியார் துறையில் உயர்பதவி (Manager, Doctor, Engineer, Accountant)<br>தொ.இ: G/14305 |
| பிறப்பு:1988 - இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 26<br>உயரம் : 5'11"<br>தகைமை/தொழில்- Software Engineer, Engineer<br>எதிர்பார்ப்பு: கணனி துறையும் .வேறு தனியார்.அரச பணியாளர்<br>தொ.இ: B/14229 | பிறப்பு-1995 - இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: - 1 1/2<br>சூரி செவ் 3 இல்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: A/L,(விவாகரத்தானவர்)<br>எதிர்பார்ப்பு: குணமுள்ள ஆண்<br>தொ.இ: G/14350 |
| பிறப்பு: 1992 - இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: PHD. விஞ்ஞான ஆராய்ச்சி உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/14234 | பிறப்பு -1997 - இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா:- 63<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: சித்த மருத்துவ பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம் சைவபோசனம்<br>தொ.இ: G/14370 |
| பிறப்பு: 1990 - இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 33 1/2<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:- A/L. களஞ்சிய காப்பாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14236 | பிறப்பு -1994 -இந்து<br>நட்சத்திரம் - உத்தரம்<br>கி.பா: 31 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBBS , Doctor<br>எதிர்பார்ப்பு : Doctor, Engineer<br>தொ.இ: G/14398 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# போரில் பிரான்ஸ் தலை

# முதன்மை இலக்காக தாக்



## ரஷ்யா எச்சரிக்கை

**(மொஸ்கோ)**

**பிரான்ஸ் வீரர்கள் உக்ரைன் ரஷ்யப் போரில் பங்கேற்பதற்காக உக்ரைன் செல்வார்களானால், அவர்கள்தான் முதன்மை இலக்காக தாக்கப்படுவார்கள் என ரஷ்யா எச்சரித்துள்ளது.**

உக்ரைன் ரஷ்யப் போரில், உக்ரைனுக்கு தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வரும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோன், மேற்கத்திய கூட்டாளி நாடுகள் போரில் உக்ரைனுக்கு உதவியாக தங்கள் படைவீரர்களை களமிறக்க வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்திவருகிறார்.

இந்த விடயம் புடினுக்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், பிரான்ஸ் படைவீரர்கள் போரில் பங்கேற்பதற்காக உக்ரைனுக்கு அனுப்பப்பட்டால், அவர்கள் தான் முதன்மை இலக்காக இருப்பார்கள் என ரஷ்ய உளவுத்துறைத் தலைவர்

## தேர்தல் வெற்றிக்கு பின்னர் சீனா செல்லவுள்ள புடின்



(பீஜிங்)

ரஷ்யாவில் நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி விளாடிமிர் புடின் எதிர்வரும் மே மாதம் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய ஜனாதிபதியாக அவர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டமை ஜனநாயகமற்றது எனவும் மேற்குலக நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

எனினும் சீனா, இந்தியா மற்றும் வட கொரியா உள்ளிட்ட நாடுகள் புடினுக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்திருந்தன.

இந்தநிலையில், எதிர்வரும் மே மாதத்தின் நடுப்பகுதியில் விளாடிமிர் புடின் சீனாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. (நி-5)

## ரஃபா மீதான தாக்குதலுக்கு இத்தாலி கடும் எதிர்ப்பு



(உரோம்)

காசா பகுதியின் தெற்கு நகரமான ரஃபா மீது இஸ்ரேலியப் படைகள் தரைவழி தாக்குதலை நடத்தவுள்ளதற்கு இத்தாலி தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

"ரஃபாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைக்கு நாங்கள் எங்கள் எதிர்ப்பை மீண்டும் வலியுறுத்துவோம், இது அந்தப் பகுதியில் திரண்டிருக்கும் பொதுமக்களுக்கு இன்னும் பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்" என்று இத்தாலிய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனப் பகுதிக்கு மனிதாபிமான உதவிகளை பாதுகாப்பாக வழங்குவதை உறுதி செய்வதற்காக சைப்ரஸிலிருந்து காசா வரையிலான புதிய தரைவழிப் பாதைகள் மற்றும் கடல்வழிப் பாதையைத் திறப்பது முன்னுரிமை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

## உலகின் மகி
## 7 ஆவது முறை

(எல்சிங்கி)

உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் தரவரிசையில், இந்த ஆண்டும் முதல் இடமாக பின்லாந்து அறிவிக்கப்பட்டுள்ளது

ஐக்கிய நாடுகள் சபையின் உலக மகிழ்ச்சி அறிக்கையின்படி, 2024 ஆம் ஆண்டில் உலகின் மகிழ்ச்சியான நாடாக ஃபின்லாந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி டென்மார்க் இரண்டாவது இடத்தையும் ஐஸ்லாந்து மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளது.

மேலும் குறித்த அறிக்கையின்படி இலங்கை 128 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

அத்துடன் 143 நாடுகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட கணக்கெடுப்



பின் ப
யற்ற
மாறிய

## சுரங்கத்தில் வெடிப்பு சம்பவம் 12 பேர் உயிரிழப்பு


### பாகிஸ்தானில் சோகம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் நிலக்கரி சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பலோசிஸ்தான் மாகாணத்தின் ஹார்னாய் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற போது சுரங்கத்துக்குள் 20



ஊழியர்கள் இருந்தனர். அவர்களில் 8 பேர் காப்பாற்றப்பட்டனர், 12 பேர் உயிரிழந்தனர எனவும் பலோசிஸ்தான் மாகாண சுரங்க கண்காணிப்பு அதிகாரி தெரிவித்துள்ளார். (நி-5)

## தாய்வானை

(தாய்பெய்)

தாய்வானைச் சுற்றி சீனா கடற்படைத் தளங்களை அமைத்துள்ளமையானது மிகவும் அச்சறுத்தலான விடயம் என அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோசேப்வு தெரிவித்துள்ளார். தலைநகரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்சீனக் கடல் பகுதியில் தாய்வானை கட்டுப்படுத்தும் நோக்குடன் அதன் அருகாமையில் மூன்று கடற்படைத் தளங்களை சீனா அமைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...லையிட்டால் ...ாக்கப்படும்

## ...க

...பாரில்
...னால்,
...வார்கள்




...ர் தான்
...க இருப்
...ப உள
...லைவர்

எச்சரித்துள்ளார்.

ரஷ்ய எல்லைக்குள் வாளுடன் கால் வைக்கும் அனைத்து பிரான்ஸ் படை வீரர்களும் தாக்கப்படுவார்கள், அதுதான் அவர்களுடைய தலைவிதியாக இருக்கும் என்று கூறியுள்ளார். (நி-5)

# பிரேசிலில் கடுமையான வெப்பத்தால் கடற்கரைக்கு செல்லும் மக்கள்



(பிரேசிலியா)

பிரேஸிலில் நிலவும் அதிக வெப்பமான கால நிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பிரேஸிலின் தலைநகரான ரியோ டி ஜெனிரோவில் அதிகபட்சமாக 62.3 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இந்நிலையில், வெப்பத்தைத் தணிக்க மக்கள் நீர்நிலைகளை நோக்கி படையெடுத்து வருகின்றனர்.

எதிர்வரும் நாட்களில் வெப்பநிலை தொடரும் என்பதால் பொதுமக்கள் தேவையில்லாமல் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.

மேலும் வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகள் மற்றும் ஆலோசனைகளையும் அதிகாரிகள் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ...மகிழ்ச்சியான நாடாக ...முறையாகவும் பின்லாந்து

...நாடு
...ந்த
...ந்து

...லக
...024
...ழ்ச்சி
...விக்

...ண்
...ந்து
...டித்

...ன்படி
...தைப்

...ளப்
...கடுப்



பின் படி, உலகின் மிகவும் மகிழ்ச்சியற்ற நாடாக ஆப்கானிஸ் தான் மாறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்லாந்து தொடர்ந்து 7 ஆவது முறையாக முதலிடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கனடாவுடன் கைகோர்த்த ஜேர்மனி

## எரிபொருள் ஒப்பந்தம் கைச்சாத்து



(ஒட்டாவா)

கனடாவும் ஜேர்மனியும் எரிவாயு தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜேர்மனி தனது எரிவாயுத் தேவைகளுக்காக பெரிதும் ரஷ்யாவை நம்பியிருந்த நிலையில் ரஷ்யா ஜேர்மனியை கைவிட்டது.

இந்நிலையில் தனது எரிவாயு தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஜேர்மன் தற்போது வேறு நாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறது.

அதன் அடிப்படையில் கனடாவுடன் ஜேர்மன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தின் படி கனடாவின் Newfoundland and Labrador மற்றும் Nova Scotia முதலான இடங்களில் தயாரிக்கப்படும் ஹைட்ரஜன் எரிவாயு ஜேர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு கனேடிய பெடரல் ஆற்றல் மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சரான Jonathan Wilkinson இந்த ஒப்பந்தம் தொடர்பான பணிகள் 2022ஆம் ஆண்டு ஜேர்மன் சேன்ஸலரான ஓலாஃப் ஷோல்ஸ் கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோவை சந்தித்த போதே ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். (நி-5)

# ...னை அச்சுறுத்தும் சீனா

...கடற்
...ள்ள
...ான
...வளி
...சப்வு
...இடம்
...விட

...தாய்
...டன்
...கடற்
...மைத்
...ப்பிட்



டுள்ளார்.

சீனா மற்றும் தாய்வான் ஆகிய இரு நாடுகளும் தென் சீனக் கடலின் பெரும்பகுதி தங்களுக்குச் சொந்தமானது என வலியுறுத்திவருகின்றன. ஆனால், தாய்வான் இடு அபா எனப்படும் தீவினை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

இந்த நிலையில் தென்சீனக் கடலில் சீனாவின் ஆக்கிரமிப்பு அதிகரித்துவருகின்றமையானது தாய்வானின் இறைமைக்கு அச்சுறுத்தலாக அமைந்துவருவதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)


# ரஷ்யாவிலிருந்து வெளியேற்றப்படவுள்ள சுமார் 9000 குழந்தைகள்

(மொஸ்கோ)

ரஷ்ய நகரம் ஒன்றிலிருந்து சுமார் 9,000 சிறுவர் சிறுமிகள் வெளியேற்றப்பட இருப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்ய நகரமான பெல்கோரோட் மற்றும் அதைச் சுற்றியுள்ள பல மாவட்டங்களிலிருந்து சுமார் 9,000 சிறுவர் சிறுமிகள் வெளியேற்றப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைன் குண்டு தாக்குதல் மேற்கொண்டிருப்பதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக அப்




பகுதி ஆளுனரான வியாசஸ்லாவ் கிளாட்கோவ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முதல் கட்டமாக நாளை 1,200 பிள்ளைகள் வெளியேற்றப்பட இருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப் பிராணிகளுக்கு வெப்ப பக்கவாதம் ஏற்படும் அபாயம்

## விலங்கு நிபுணர்கள் எச்சரிக்கை விடுப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக வீடுகளில் வளர்க்கப்படும் நாய், பூனை போன்ற விலங்குகளுக்கு வெப்ப பக்கவாதம் ஏற்படும் அபாயம் உள்ளதாக விலங்கு நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

செல்லப்பிராணிகளை ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை குளிப்பாட்டுவது நல்லது என்று கால்நடை மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், அதிக வெப்பம் நிலவும் போது 20 நிமிடங்களுக்கு அதிகமாக பகல் நேரங்களில் செல்லப்பிராணிகளை வாகனத்தில் வைத்திருப்பது மிகவும் ஆபத்தானது.

வீடுகளில் உள்ள விலங்குகள் மற்றும் சாலைகளில் உள்ள விலங்குகளும் வெப்ப அதிர்ச்சியால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது டன், அவர்களுக்கு தண்ணீர் மற்றும் உணவு வழங்குவது அத்தியாவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் வீடுகளுக்குள் பாம்புகள் நுழையும் போக்கு அதிகரித்துள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நீர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல் கழகத்தினால் "நீருக்கான யுத்தம் நீண்ட தூரத்தில் இல்லை" என்ற தலைப்பில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கலைப்பீட மண்டபத்தில் கருத்தரங்கு இடம்பெறும். (நி-5)

## யோகர் சுவாமிகளின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யோகர் சுவாமிகளின் குருபூசை தினமான இன்று மு.ப 9.30 மணி முதல் சிவ தொண்டன் நிலையத்து புராணமண்டபத்தில் யோக சுவாமிகளது திருமேனிக்கு திவ்யமான அபிஷேக ஆராதனையும் நண்பகலின் போது மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது என சிவ தொண்டன் சபையினர் அறிவித்துள்ளனர். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 | 185 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 200 | 280 |
| தக்காளி | 100 | 100 | 100 | 200 | 100-120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 120 | 200 | 130 |
| கோவா | 300 | 300 | 300 | 400 | 250 |
| கரட் | 300 | 400 | 450 | 500 | 300 |
| பூசணி | 180 | 200 | 120 | 250 | 150 |
| புடோல் | 160 | 150 | 120 | 150 | 120 |
| வாழைக்காய் | 150 | 180 | 120 | 200 | 140 |
| சின்ன வெங்காயம் | 200 | 250 | 250 | 250 | 200-300 |
| பெரிய வெங்காயம் | 550 | 550 | 480 | 600 | 450 |
| பாகற்காய் | 400 | 350 | 300 | 400 | 350 |
| வெண்டக்காய் | 200 | 200 | 120 | 400 | 100-150 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 200 | — |
| பயற்றங்காய் | 200 | 200 | 250 | 300 | 200-280 |
| லீக்ஸ் | 300 | 300 | 280 | 400 | 230 |
| பீற்றூட் | 250 | 200 | 250 | 300 | 200 |
| கறிமிளகாய் | 400 | 350 | 200 | 400 | 350 |
| முருங்கைக்காய் | 1000 | 1100 | 600 | 1200 | 500-900 |
| போஞ்சி | 200 | 200 | 250 | 300 | 220 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 120 | 180 | — |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 50 | 80 | 40-60 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 | 300 | 100-180 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 110 | 80-120 | 50-120 |
| இராசவள்ளி | 400 | 350 | 300 | 400 | -- |
| வெங்காயப்பூ | 180 | 140 | 150 | 300 | 100 |
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 | 100 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 100 |
| ஈரப்பலா | 80 | — | — | — | 80 |

## இன்று ஒரு தகவல் 71



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

### புண்ணியம்

எமலோகத்திலே ஒரு ஆசாமியைக் கொண்டு போய் நிறுத்தினார்கள் எமதர்மராஜா தன்னுடைய சிம்மாசனத்தில உர்க்காந்திருந்தார். இந்த ஆளு பரிதாபமா அவர் முன்னாடி நின்று கொண்டிருந்தார்.

பக்கத்திலே பதிவேட்டை புரட்டிக்கொண்டு சித்ர குப்தன் நின்று கொண்டிருந்தார். என்ன தப்பு செய்தான் இவன்? என்று எமதர்மராஜா கர்ஜிக்கிறார்!

சித்ர குப்தன் அந்த ஆசாமியோட கணக்கை பார்க்கிறான்.அவனுக்கே தலை சுத்துது. பண்ணின பாவம் ஒன்றா இரண்டா இருந்தா பட்டியல் போட்டு சொல்லலாம் பஞ்சமா பாதகம் அத்தனையும் செய்திருக்கான். எகப்பட்டது இருக்கு! அதனாலே- கணக்கு வழக்கு இல்லாமலே இவன் தப்பு பண்ணியிருக்கான். இந்த ரிஜிஸ்ரலிலே முடிஞ்சி Carry Over ஆகி இன்னொரு ரிஜிடருக்கு போயிருக்கு... அதை யெல்லாம் தேடி எடுக்கனும் என்றா அதுக்குள்ளே நம்ம ஆயுளே முடிஞ்சாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றான் சித்திரகுப்தன்!

எமதர்மன் பார்த்தார். அப்படி என்றா இவனை கொண்டுபோய் நரகத்திலே தள்ளு என்று உத்தரவு போட்டார்.

பதிவேட்டிலே ஒரு வரி மட்டும் பளிச்சுன்னு தெரிஞ்சுது உடனே சித்திர குப்தன்; இவன் இத்தனை பாவங்கள் பண்ணியிருந்தா கூட ஒரே ஒரு புண்ணியம் மட்டும் செய்திருக்கிறான்! என்றார். என் அது என்று எமதர்மன் கேட்டார். இந்த ஆளை ஒரு நாள் ஒரு கிழவி கோவிலுக்கு போறதுக்கு வழி கேட் போது, அதோ அந்தப் பக்கமா போ என்று ஒரு விரல்லாலே வழி காட்டியிருந்தார்! அப்படி என்று சொன்னான் சித்திர குப்தன் .

உடனே எமதர்மர் தீர்ப்பை Revise பண்ணினார். அப்படி என்றால் இவர் உடைய அந்த விரலுக்கு மட்டும் பன்னீர் தெளித்து சந்தனம் பூசி சொர்க்கத்திற்கு அனுப்பு மற்ற படி இவனை நரகத்திலே தள்ளு என்று உத்தரவு இட்டார். பாவம் செய்து விட்டு நரகத்திற்குச் செல்பவர்களிற்கு மட்டும் தான் பிரச்சினை என்று இல்லை. புண்ணியம் செய்து விட்டு சொர்க்கத்திற்க்குப் போறவங்களுக்கும் கூட பிரச்சினை ஏற்படுகிறதாக தெரிகிறது.

கர்ணன் ரொம்ப பெரிய கொடையாளி!

யார் எதைக் கேட்டாலும் இல்ல்லை என்று சொல்வதில்லை!

அவன் கூட பொன்னையும் பொருளையும் தான் தானமாக கொடுத்தான்.

பசி என்று வந்தவர்களுக்கு புசி என்று சொல்லி எதுவும் கொடுத்ததில்லை!

ஒரு வேளை பசித்தவர்கள் யாரும் கர்ணனிடம் போகாம இருந்திருக்கலாம். யாரும் பசி என்று தேடி போகாததனாலே அன்னதானம் செய்ய கூடிய வாய்ப்பு கர்ணனிற்கு கிடைக்காமல் போயிருக்கலாம்.

அப்பேற்பட்ட கொடையாளி கர்ணன் இறந்த பிறகு சொர்க்கத்திற்கு போனான் .

சொர்க்கத்திற்கு போகிற யாருக்கும் பசிக்காது ஆனால் கர்ணனிற்கு பசிச்சது!

ஏன் எனக்கு மட்டும் பசிக்குது? அப்பிடி என்று சொர்க்க வாசலில் நின்றவர்களிடம் கேட்டானாம் கர்ணன்.

பூலோகத்திலே நீ யாருக்கும் அன்னதானம் செய்யவில்லை அதனாலே தான் உனக்குப் பசிக்கிறது! அப்பிடி என்றாராம் அந்த ஆள் !

அப்பிடி என்றால் இப்ப என்ன செய்வது ....பசி வயிற்றைக் கிள்ளுதே! என்று கவலைப்பட ஆரம்பித்தான் கர்ணன்.

உடனே அந்த ஆளு ஒரு யோசனை சொல்லியிருந்தான் என்ன தெரியுமா?

கர்ணா உன்னோட ஆள்காட்டி விரலை வாயிலே வைத்துக்கொள் பசி சரியாப் போடும் என்று சொன்னான்.உடனே கர்ணன் அதே மாதிரி செய்தான்.பசி மறைந்துவிட்டதாம். இதுக்கு என்ன காரணம்?

ஒரு சமயம் கண்ணனோட தேர்ப்பாகர்களுக்கு கர்ணன் சாப்பிடுறத்துக்கான இடத்தை தன்னோட ஆள் காட்டி விரலாலே சுட்டிக்காட்டினானாம்!

அதுவே ஒரு பெரிய தர்மமா கர்ணன் கணக்குலே சேர்ந்து விட்டதாம்.எப்படி இருக்குது இது?புராணத்திலே உங்களுக்கு நம்பிக்கை இருக்கோ இல்லையோ அதைப்பற்றி இப்போது நாம் ஆராய வேண்டாம்! சொர்க்கம் நரகம் எங்கே இருக்கு என்று யோசித்துக்கொண்டு இருக்க வேண்டாம்.

ஆனால் மனிதப்பிறவியோட மகத்துவத்தை மனிதனாகப் பிறந்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதற்காகத்தான் இதுமாதிரி கதைகள் எல்லாம். அதுதான் ஒரு பெரியவர் சொன்னார். உண்ணவும் உறங்கவும் பிறந்தவை மிருகங்கள். எண்ணவும் இரங்கவும் பிறந்தவன் மனிதன் அப்பிடி என்று. இரக்கப்படத் தெரியவில்லை என்றால் அப்புறம் என்ன சார் அவன் என்ன மனுசன்

எனக்கு தெரிஞ்ச பேச்சாளர் ஒருத்தர் இருக்கிறார். அவர் எந்த ஊருக்கு பேசப் போனாலும் 25 ரூபாய்க்கு மேலே யாரும் கொடுப்பதில்லை! கூட்டம் நடத்துபவர்களுக்கு கொஞ்சம் கூட இரக்கமே இல்லை சார் அப்பிடி என்று அவர் குறைப்பட்டுக்கொள்வார்!

சமீபத்திலே அவர் ஒரு கூட்டத்துக்கு போயிருந்தார் வழக்கம் போல 25 ரூபாதான் கொடுத்தார்கள். அதை வாங்கிக்கொண்டு முணுமுணுத்துக் கொண்டே வந்துகொண்டு இருந்தாராம். கொஞ்ச தூரம் வந்திருப்பார் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர் கையை நீட்டி ஓடிவந்திருக்கிறார். இவருக்கு கொஞ்சம் ஆறுதல். பரவாயில்லை இப்போதாவது அவர்களுக்கு புத்தி வந்திருக்கிறது. இன்னுமொரு இருபத்தைந்து ரூபா கொடுப்பதற்குத் தான் வருகிறார் போல இருக்கு என்று நினைத்தார். அவரிடம் ஓடிவந்து! சேர் கை தவறுதலாக உங்களிடம் 10 ரூபா அதிகமாகக் கொடுத்துவிட்டேன் அதை வாங்கிக்கொண்டு போவதற்குத் தான் ஓடிவந்தேன் என்றாராம். இவர்கள் எல்லாம் சொர்க்கத்திற்கோ நரகத்திற்கோ சென்றால் என்னதான் செய்வார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1970 இற்குப் பின் யாழ்ப்பாண நகர்



பேராசிரியர். பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ்.பல்கலைக்கழகம்

**1881** இல் இருந்து யாழ்ப்பாண நகரம் மக்கள் தொகையிலும், தொழில் செயற்பாடுகளிலும், பலவகை சேவைகள் வழங்குவதிலும் மற்றும் அரசியல், கலாசார செயற்பாடுகளிலும் கொழும்புக்கு அடுத்து கண்டி, காலி நகரங்களிலும் பார்க்க முக்கியத்துவம் கொண்டு இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தது. 1953 இல் தெஹிவலை- மவுண்லவேனியா யாழ்ப்பாண நகரிலும் பார்க்க சற்று கூடிய சனத்தொகையைக் கொண்டிருந்த பொழுதும் அது கொழும்பு நகரின் புறநகர்க் குடியிருப்பாகும். அங்கு சேவைகள் மிகவும் குறைவாக இருந்தன.


### 1970 இற்குப் பின்னர் நகரின் நலிவு நிலை

1970 ஆம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாண நகரின் முக்கியத்துவம் பல்வேறு அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளால் குறைவடையத்தொடங்கியது. யாழ்ப்பாண நகருக்குப் பின்னின்ற கண்டி, காலி, குருநாகல் மற்றும் அநுராதபுரம் போன்றன யாழ்ப்பாணத்திலும் பார்க்கப் பெருவளர்ச்சி கண்டு யாழ்ப்பாணத்தின் முக்கியத்துவத்தினைப் பெரிதும் பின தள்ளின. யாழ்ப்பாணம் 1970 களில் இருந்து 1996 வரை அரசியல் போராட்டங்களாலும், யுத்தங்களாலும், கலவரங்களாலும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டும், மக்கள் தொகையை இழந்தும், பொருளாதாரத்தில் சுருங்கியும் வந்தது. 1995 ஒக்டோபர் மாத இறுதியில் நகரில் வாழ்ந்த மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்து ஆறு மாதங்கள் நகர் மக்களற்ற நகரமாக இருந்து 1996 ஏப்ரல் இறுதியில் தான் மக்கள் அங்கு மீளக்குடியேறத் தொடங்கினர்.

1970 - 1996 இற்கு இடைப்பட்ட காலத்தில் நகரின் வளர்ச்சியைப் பாதித்த காரணிகளைக் கால ரீதியாகப் பின்வருமாறு நோக்குவோம்:- 1970 இல் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் இடதுசாரி முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று புதிய அரசியல் யாப்பைக் கொண்டுவர முற்பட்ட பொழுதும் அது தமிழ்த் தரப்பு நியாயங்களையோ, கோரிக்கைகளையோ பரிசீலிக்க மறுத்துவிட்டது. இதனால் யாழ்ப்பாணத்தில் அரசியல் போராட்டங்கள் தொடங்கின.

மேலும் இலங்கையில் பல்கலைக்கழக அனுமதியில் மொழி வழித்தரப்படுத்தலில் மாவட்டக்கோட்டா முறை அறிமுகம் செய்யப்பட்டதால் யாழ்ப்பாண நகரமும் பாடசாலைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன. மாவட்டக் கோட்டா முறை அறிமுகத்துடன் வெளிமாவட்டப் பிள்ளைகள் யாழ்ப்பாண நகரிலுள்ள பிரபல கல்லூரிகளில் சேர முடியாதநிலை ஏற்பட்டது. இதனால் யாழ்ப்பாண நகர பிரபல பாடசாலைகளின் விடுதிகளை மூடவேண்டிய நிலையும் ஏற்பட்டது. 1970 இல் இருந்து வசதியும் முயற்சியும் உள்ள யாழ்ப்பாண மாணவர்கள் இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு உயர் கல்வி கற்கப் பெரும் எடுப்பில் செல்லலானார்கள். 1974 இல் யாழ்ப்பாண நகரில் நடைபெற்ற அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு இறுதி நாள் துன்பகர நிகழ்வு யாழ்ப்பாண நகரைப் பெரிதும் பாதித்தது. மேலும் 1974 இல் மேற்கொள்ளப்பட்ட வட்டுக் கோட்டை தனிநாட்டுக்கோரிக்கைத் தீர்மானத்தால் யாழ்ப்பாண நகர அரசியல்நிலை மேலும் பதற்றம் பெறத்தொடங்கியது.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம் பல்வேறு சர்ச்சைகளின் மத்தியில் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி வளாகத்தில் 1974 ஒக்ரோபர் 6 ஆம் திகதி அன்றைய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினால் ஆரம்பிக்கப்பட்டது. 1979 ஜனவரியில் வளாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.



[illegible]

The rest house Jaffna

Elephant Pass rest house

1977 ஆம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் ஐக்கிய முன்னணி பெரும் வெற்றிவாகை சூடியதைத் தொடர்ந்தும் புனித பத்திரிசியார் கல்லூரி களியாட்ட விழாவில் ஏற்பட்ட அசம்பாவிதத்தைத் தொடர்ந்தும் யாழ்ப்பாண நகரில் ஏற்பட்ட கலவரத்தால் யாழ்ப்பாணம் பெரியகடை சந்தைத் தொகுதி எரியூட்டப்பட்டு அழிவுற்றது. 1981 இல் மாவட்டசபைத் தேர்தலுடன் தொடர்பான வன்முறைகளால் பிரபலமான யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதுடன் பல வீடுகளும் தீக்கிரையாகின.

1983 இல் திருநெல்வேலி தபால் கட்டைச்சந்தி குண்டு வெடிப்பு, சிப்பாய்கள் மரணம் காரணமாக நாடு தழுவிய நிலையில் ஏற்பட்ட இனக் கலவரத்தால் யாழ்ப்பாண நகரம் பெரும் எண்ணிக்கையான உயிரிழப்பைச் சந்தித்தது. மேலும் 1984 இல் ஆஸ்பத்திரி வீதியில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால் நகரம் மேலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையை தாக்குதலும், மாநகரசபைக் கட்டிடத்தொகுதி அழிப்பும் நகரை மேலும் பாதித்தன. மேலும் 1980 இல் இருந்து கோட்டையைச் சூழ்ந்த பகுதிகளும் விமானத்தாக்குதல்களால் நகரின் பல பகுதிகளும் பெரும் அழிவுக்குட்பட்டன. நகரில் முக்கியமாக இருந்த பல தொழில் நிறுவனங்கள் செயலிழந்தன. லைடன்பனியன் தொழிற்சாலை, மில்க்வைட், அரஸ்கோ நிறுவனங்கள் மற்றும் பல்வேறு சிறிய நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் செயலிழந்தன.

1987 இல் இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்ற சண்டை, முதலில் யாழ்ப்பாண நகரை மையமாகக்கொண்டு இருந்தது. இச் சண்டையால் யாழ்ப்பாண நகரமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் பெரிதும் பாதிப்படைந்தன. பெருமளவு உடமை இழப்பும், உயிரிழப்பும் ஏற்பட்டன. நகர மக்கள் ஒரு கட்டத்தில் முழுமையாக வெளியேறி அயல் கிராமங்களில் தங்கி இருந்து விட்டு பல கிழமைகளின் பின்னர் நகர் திரும்பினர்.

1991 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் புங்குடுதீவு, வேலணைத்தீவு, மண்டைதீவு, காரைநகர் மக்கள் யுத்தத்தினால் முழுமையாக இடம்பெயர்ந்து யாழ்ப்பாண நகரிற்கு வந்தனர். காரைநகர் மக்களில் ஒரு பகுதியினர் வட்டுக்கோட்டைப் பகுதியிலும் மற்றைய பிரிவினர் யாழ்ப்பாண நகரிலும் நண்பர்கள், உறவினர் வீடுகளில் அடைக்கலம் புகுந்தனர். நகரம் இடம்பெயர்ந்தவர்களால் நிரம்பிவழிந்ததுடன் இடம்பெயர்ந்து வந்தோரில் அதிகமானோர் நிவாரணங்களை நம்பியே வாழும் நிலை ஏற்பட்டது. நகரம் முறையான போக்குவரத்து, மின்சாரம், குடிநீர் இல்லாது பெரும் கஷ்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. மீனவர்களுக்குக் கடற்கரைகளில் இருந்து சிறிய தூரத்திற்கே மீன்பிடிக்க அனுமதி இருந்தது.

இக்கட்டுப்பாடுகளால் நாவாந்துறை, குருநகர், பாசையூர் மற்றும் கொழும்புத்துறை மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் அவர்களின் நுகர்வுச்சக்தி மிகவும் குறைவடைந்த நிலையில் இருந்தது. 1991 ஆம் ஆண்டு நகரில் வாழ்ந்த முஸ்லிம்கள் வெளியேறியதால் நகரின் குடித்தொகை குறைந்ததுடன் அவர்களால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்ட பல தொழில்களை முன்னெடுக்க முடியாது அவை அழிவுற்றன. அவர்களின் இடம் பெயர்வுக்குமுன்னர் நகரில் வாழ்ந்த டாவூடி போற சமூகத்தினர் வெளியேறியதால் வர்த்தகச் செயற்பாடுகள் பாதிப்பிற்குட்பட்டன.

நகரின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில் யுத்தம், அரசியல் குழப்ப நிலைகளால் வசதி படைத்த குடும்பங்கள், இளைஞர்கள் நகரைவிட்டு வெளியேறி கொழும்புக்கும் வெளிநாடுகளிற்கும் செல்லலாயினர். இச்செயற்பாடு நாட்டின் செல்வத்தை வெளிக்கொண்டு செல்ல, நகரம் மேலும்மேலும் பொருளாதாரத்தில் கீழ்நோக்கிச் சென்றதுடன் தொழில் நிறுவனங்கள் பல்வேறு காரணங்களால் மூடப்படலாயின. இக்காலப்பகுதியில் நகைக்கடைகளே ஓரளவு இயங்கின. மக்கள் வறுமையில் தங்களிடம் இருந்த ஆபரணங்களை அடைவு வைப்பதிலோ, விற்பதிலோ ஈடுபட்டனர்.

1995 ஆரம்பத்தில் வலிகாமம் வடக்கினை இலங்கை இராணுவம் கைப்பற்றிய பின அது யாழ்ப்பாண நகரம் உட்பட ஏனைய வலிகாமப் பகுதிகளைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி போன்ற கிராமங்களைக் கைப்பற்றி தெற்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்த நிலையில் 1995 ஒக்டோபர் 30 ஆம் திகதி விடுதலைப்புலிகள் யாழ்ப்பாண நகரம் உட்பட வலிகாமம் பகுதியில் வாழ்ந்த மக்களை அப்பிரதேசங்களை விட்டு வெளியேறி தென்மராட்சி மற்றும் வன்னிப் பெருநிலப்பகுதிகளுக்குச் செல்லுமாறு பணித்தனர். இதனால் 5 லட் சத்துக்கு மேற்பட்ட மக்கள் வலிகாமத்தைவிட்டு வெளியேறி தென்மராட்சி மற்றும் வன்னி, கொழும்புக்குச் சென்றனர். 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் யாழ்ப்பாண நகரம் மக்களற்ற மரண அமைதி நிலவும் நகரமாக மாறியது.

இச்சூழ்நிலையில் இலங்கை இராணுவம் 1996 ஏப்ரலில் தென்மராட்சியில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் பின்னர் இடம்பெயர்ந்த நகர மக்களும் தீவுப்பகுதி, வலிகாமம் பகுதி மக்களில் ஒரு பகுதியினரும் மீளத் தங்கள் தங்கள் கிராமங்களில் குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 436





இங்கே உனக்கு இடம் இல்லை. ஆகையால் இலங்கைக்குப் போ! இலங்கைச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொள்!' என்று இப்படியெல்லாம் இளையபிராட்டி அடிக்கடி சொல்லி என் மனத்தில் ஆசையை வளர்த்து விட்டார். ஆகையால் நான் குற்றவாளிதான் சக்கரவர்த்தி என்னைச் சிறைபடுத்திக் கொண்டு வரும்படி கட்டளையிட்டதற்குக் காரணம் இருக்கிறது."

"கொஞ்சம் பொறுங்கள், இளவரசே! அப்படித் தங்கள் மனத்தில் எண்ணம் உதித்திருந்தால் அது இந்த இலங்கைத் தீவின் பாக்கியம். அதற்குப் பொறுப்பாளியும் தாங்கள் அல்ல. தங்கள் தமக்கையார் இளைய பிராட்டியும் அல்ல. சுந்தர சோழ சக்கரவர்த்திதான் அதற்குப் பொறுப்பாளி அவரே என்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறார் தங்களை இலங்கைச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்துப்பார்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். குந்தவை தேவியிடம் இதைப் பற்றி முதன் முதலில் கூறியவரும் சக்கரவர்த்தி தான். தங்கள் தந்தையின் விருப்பத்தையே தமக்கையார் தங்களிடம் தெரியப்படுத்தியிருக்கிறார். ஆகையால் தாங்கள் குற்றவாளி அல்ல."

"சேனாதிபதி! அப்படியானால் என் தந்தையிடம் போவதற்கு நான் ஏன் தயங்கவேண்டும்? அவரிடம் நடந்தது நடந்தபடி சொல்கிறேன். இதோ இருக்கும் இந்த இரண்டு பேரும் எனக்காகச் சாட்சி சொல்லட்டும். பிறகு சக்கரவர்த்தி என்ன கட்டளை இடுகிறாரோ, அதன்படி நடந்து கொள்வது என் கடமை."

பார்த்திபேந்திரன் இப்போது அனல்கக்கும் குரலில் கூறினான்: "சேனாதிபதி ஏதேதோ வெறும் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கிறோம். இனியும் மூடி மறைப்பதில் பயன் ஒன்றுமில்லை. இளவரசரிடம் உண்மையைச் சொல்லியே தீர வேண்டும். தாங்கள் சொல் கிறீர்களா அல்லது நான் சொல்லட்டுமா!"

"நானே சொல்கிறேன் பொறுங்கள்!" என்றார் சேநாதிபதி. அக்கம் பக்கம் பார்த்துவிட்டுக் கூறினார். "இளவரசே! தங்களுடைய களங்கமற்ற உள்ளத்தை மாசுபடுத்த வேண்டாம் என்று எண்ணியது பயன் படவில்லை. ஒரு விரஸமான விஷயத்தைப் பற்றித் தங்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. பெரிய பழுவேட்டரையர் இந்த முதிய பிராயத்தில் நந்தினி என்னும் பெண்ணை மணம் புரிந்து கொண்டிருப்பது தங்களுக்குத் தெரிந்த விடயமே. அவள் ஒரு சூனியக்காரி பயங்கரமான மாய மந்திர வித்தைகள் அவளுக்குத் தெரிந்திருக்கின்றன. அவற்றின் உதவியால் பெரிய பழுவேட்டரையரை அவள் தன் காலடியில் போட்டு வைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் தன் காலால் இட்ட பணியை இவர் தலையில் ஏந்தி நிறைவேற்றி வைக்கிறார். பழங்குடியில் பிறந்து பல வீரச் செயல்கள் புரிந்த அந்தப் பெரியவருக்கு விதி வசத்தால் இந்த மாதிரி துர்க்கதி சம்பவித்து விட்டது."

"சேனாதிபதி! இது நான் கேள்விப்படாதது அல்லவே? சோழ தேசத்தில் நாடு நகரமெல்லாம் பேசிக்கொள்ளும் விஷயந்தானே?" என்றார் இளவரசர்.

"அந்த மந்திரக்காரி நந்தினியின் சக்தி இதுவரையில் பழுவேட்டரையர்களை மட்டும் ஆட்டி வைத்துக் கொண்டிருந்தது. இளவரசே! மன்னிக்க வேண்டும்! இப்போது அவள் சக்கரவர்த்தியின் பேரிலும் தன்னுடைய மந்திரத்தைப் போட ஆரம்பித்து விட்டாள்.

அதனால்த் தான் இத்தகைய கட்டளையை தங்களைச் சிறைப்படுத்தி வரும்படியான கட்டளையை சக்கரவர்த்தி பிறப்பித்திருக்கிறார்!"

"சேனாதிபதி! எச்சரிக்கை! சக்கரவர்த்தியைப் பற்றிக் கௌரவக் குறைவாக எதுவும் சொல்ல வேண்டாம்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## எறும்புக்கு பயந்த அரசர்



கடியூர் நாட்டு அரசர் போர் என்று கேட்டாலே பயந்து நடுங்குபவர். இதுவரை ஒரு நாள்கூட அவர் வாளெடுத்து வீசியதில்லை. ஈட்டி, கேடயம் என்றால் என்னவென்றே அவருக்குத் தெரியாது.

எறும்பு கடிக்கே பயந்தவர் என்றால் பாருங்களேன். அரண்மனைக்குள் ஒரு எறும்பைப் பார்த்து விட்டால் போதும். காவலனைக் கூப்பிட்டுக் கேள்வி மேல் கேள்வி கேட்பார்.

"யாரங்கே? எறும்புக்குப் பதிலாக உன்னைக் கீழே படுக்க வைத்து நசுக்கி விடுவேன்" என்று மிரட்டுவார். எறும்புகளைச் சித்திரவதை செய்து, உடனடியாகக் கொல்லச்சொல்லிக் கட்டளையிடுவார். இல்லையேல், காவலனை வேலையை விட்டு அனுப்பிவிடுவார். கடியூர் நாட்டு மன்னனின் இந்த இழிவான செயலைக் கண்டு எறும்புகள் எதிர்த்து நிற்க விரும்பின. ஒருநாள் அவை ஒன்று கூடித் தங்களது ராணியிடம் புகார் செய்தன.

மறுநாள், எறும்பு ராணி தலைமையில் லட்சக்கணக்கான எறும்புகள் அரண்மனைக்குப் படையெடுத்து வந்தன. சாரை சாரையாக வந்த எறும்புக் கூட்டத்தைப் பார்த்து, காவலர்கள் பதறினார்கள். கோட்டையின் வாயிலை மூடி வைத்தார்கள்.

கதவுக்குக் கீழிருந்த சந்து வழியாக எறும்புகள் கோட்டைக்குள் நுழைந்தன. அவை படை வீரர்களைப் போல அணிவகுத்து நின்றன. அங்கிருந்த காவலர்களைக் கடித்து வைத்தன.

அரசனுக்கு அடங்காத கோபம். பாதாள அறை சிங்கத்துக்கு எறும்புகளை இரையாக்கச் சொன்னார். எறும்புகளை மண்வாரியால் அள்ளி, காவலர்கள் சிங்கத்தின் கூண்டில் வீசினர். எறும்புகள், சிங்கத்தை மொய்த்துக் கடித்தன. சிங்கத்தைச் சாகடித்தன.

அடுத்ததாகப் பட்டத்து யானைகளை அரசர் அவிழ்த்துவிடச் சொன்னார். எறும்புக்கடி தாங்காமல் பட்டத்து யானைகள் பிளிறி ஓடின. எறும்புகளைக் கொல்ல மந்திரிகள் ஒன்றுகூடிச் சென்றார்கள். எறும்புகள் மந்திரிகளைக் கடித்து வைத்தன. அதைப் பார்த்து அச்சப்பட்ட அரசர் அரண்மனைக்குள் கட்டிய தெப்பத்தில் குதித்தார். இடுப்பளவு தண்ணீர் இருந்த இடம் பார்த்துப் பாதுகாப்பாக நின்று கொண்டார்.

"அரசரைக் காப்பவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கப்படும்." என்று நாட்டு மக்களுக்கு முரசறிவிக்கச் சொன்னார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது மன சக்தியின் மூலம் எதையும் சாதிக்க முடியும், தூய பண்புகளால் மலையையும் நகர்த்த முடியும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சேர்ச்சிலின் தோல்வியும் புடினின் வெற்றியும்

ரஷ்ய ஜனாதிபதியாக விளாடிமிர் புடின் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதிலும் மிகக் கணிசமான வாக்குகளைப் பெற்று அவர் மீளவும் ஜனாதிபதியாகியுள்ளார்.

உக்ரைன் மீது கொடும் போர் நடத்தி வரும் புடினுக்கு உலக நாடுகள் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

தவிர, ரஷ்யா நடத்துகின்ற கடும் போரில் உக்ரைன் தாக்குப் பிடிக்கிறதெனில் அதற்குக் காரணம் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் உக்ரைனுக்கு வழங்கி வருகின்ற ஆயுதங்கள் என்பது புரிதற்குரியது.

தவிர, ரஷ்ய – உக்ரைன் போர் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கலாம் என்ற ஊகங்களும் சர்வதேச அளவில் இருக்கவே செய்கிறது.

இந்நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா நடத்துகின்ற போரை முடிவுக்குக் கொண்டு வருவதாக இருந்தால், அதற்கு இரண்டு வழிகள் மட்டுமே உண்டு.

அதில் ஒன்று; ரஷ்ய ஜனாதிபதி புடின் இயற்கை எய்துவது. மற்றையது ஜனாதிபதித் தேர்தலில் புடினைத் தோற்கடிப்பது.

இந்த இரண்டு வழிமுறைகளைத் தவிர, வேறு எந்த நடவடிக்கை மூலமும் புடினின் போர் வெறியைத் தடுக்கவும் தணிக்கவும் முடியாது.

ஆனால் புடின் விடயத்தில் இயற்கை தனது கடமையை ஒத்திவைத்துள்ளது போல தெரிகிறது.

அப்படியானால், இனி இருக்கக்கூடிய வழி ஜனாதிபதித் தேர்தலில் அவரைத் தோற்கடிப்பது மட்டுமே. இருந்தும் அதுவும் நடக்கவில்லை.

இங்குதான் ஓர் உண்மை புலப்படுகிறது. அதாவது உக்ரைன் மீதான போரை புடின் தொடங்கியபோது அதனை ரஷ்ய மக்கள் விரும்பவில்லை.

ஆனால் போர் நடந்து கொண்டிருக்கும் போது, உலகின் பலம் மிகுந்த நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்களையும் படையினரையும் வழங்கி ரஷ்யாவுக்கு எதிராகச் செயற்பட்டபோது, அதனை ரஷ்ய மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இங்குதான் மீண்டும் புடின் ஜனாதிபதியாக வரவேண்டும் என ரஷ்ய மக்கள் முடிவெடுக்கின்றனர்.

இவ்விடத்தில் ரஷ்ய மக்களையும் பிரிட்டிஷ் மக்களையும் ஒப்பிட முடிகிறது.

ஆம், இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற பின்னர், அந்தப் போரை நடத்திய பிரிட்டிஷ் பிரதமர் வின்சன் சேர்ச்சில் தேர்தல் களத்தில் நிற்கிறார்.

எனினும் தேர்தல் முடிவு வின்சன் சேர்ச்சிலுக்குப் படுதோல்வியாக அமைகிறது.

இச்சம்பவத்தை விமர்சித்த பிரிட்டிஷ் பத்திரிகைகள்; போர்க்குணம் நிறைந்த வின்சன் சேர்ச்சிலை பிரிட்டிஷ் மக்கள் தோற்கடித்ததன் மூலம் உலகிலேயே மிகச் சிறந்தவர்கள் பிரிட்டிஷ் மக்கள் என்பதை நிரூபித்துள்ளனர் எனக் கருத்துரைத்தன.

இந்த அடிப்படையில் போர்க்குணம் மிகுந்த புடினை இப்போது ரஷ்ய மக்கள் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்ததன் மூலம் மூன்றாம் உலகப் போருக்கு வித்திட்டுள்ளனர் எனக் கூறுவதில் தவறில்லை.

# சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள மத்திய வங்கிக்கு உரிமை இல்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள மத்திய வங்கிக்கு எத்தகைய தார்மீக உரிமையும் இல்லை என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சியாக பணத்தை அச்சடித்து இந்நாட்டில் பணவீக்கத்தை ஊக்குவித்ததன் காரணமாக இந்நாட்டின் நிதிக் கொள்கை குடும்பமயமானது.

அதனால்தான் அரசியல் தலையீடுகள் இன்றி நடைமுறைப்படுத்துவதற்காக, மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தும் புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டன என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இதனைப் பயன்படுத்திக்கொண்டு மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளத்தை 70 வீதம் வரை அதிகரித்துக் கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது எனவும், இவ்வாறு செயற்பட மத்திய வங்கிக்கு எத்தகைய தார்மீக உரிமையும் இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஆகையால், மத்திய வங்கி தங்களின் ஊழியர்களுக்கு அநியாயமான முறையில் அதிகரித்துள்ள சம்பளத்தை மீளத் திருப்பிக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சஜித் பிரேமதாஸ மேலும் வலியுறுத்தினார். (ம-7,10)

### அகதி தஞ்சம் கோரிய இளைஞனை

## பயங்கரவாத தடுப்பு பிரிவு விசாரணைக்கு அழைப்பு

அகதி தஞ்சம் கோரிய இளைஞன் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைப் பிரிவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

புலம்பெயர் நாடொன்றில் புகலிட கோரிக்கை கோரிய இளைஞன் கடந்த பல வருடங்களாக புலம்பெயர் நாடொன்றில் வசித்துவரும் நிலையில் குறித்த இளைஞனை விசாரணைக்காக அழைத்துள்ளனர்.

வவுனியா ஓமந்தை பகுதியை சேர்ந்த தர்மலிங்கம் ரதீபன் (32) என்ற இளைஞனே கொழும்பு பயங்கரவாத மற்றும் குற்றத்தடுப்பு விசாரணை பிரிவினரால் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனின் வீட்டுக்கு சென்ற பொலிஸார் குறித்த அழைப்பாணையிணை அவரின் பெற்றோரிடம் வழங்கியுள்ளனர். (ம-7,10)

## மணவாளக்கோல உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் மணவாளக்கோலத்தை முன்னிட்டு 27.03.2024 புதன்கிழமை காலை 9.45 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, திருவூஞ்சல் நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வருவார் என பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (ம-7,10)

## திறப்பு கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கே.கே.எஸ் வீதி யாழ் நகருக்கு அண்மித்த பகுதியில் இருந்து வாகனமொன்றின் திறப்பு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் வலம்புரி பத்திரிகை காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம். (ம-7,10)

## உழவு இயந்திர விபத்து ஒருவர் உயிரிழப்பு

மாத்தளையில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்து சம்பவம் நேற்று மாத்தளை - வில்கமுவ எலவனாகந்த பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

நெல் அறுவடை இயந்திரங்களை ஏற்றி சென்ற இரண்டு உழவு இயந்திரங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உழவு இயந்திரம் ஒன்றில் பயணித்த 26 வயதுடைய மேல் மலகஸ்வெவ புளியங்குளத்தை சேர்ந்தவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து எலவனமலை சரிவுப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இயந்திர கோளாறு காரணமாகவே விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,10)

### வட்டுக்கோட்டையில் இளைஞன் படுகொலை

## ஐந்தாவது சந்தேகநபரை அடையாளம் காட்டிய மனைவி

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியில் இளைஞனை கடத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் கைதாகியுள்ளவர்களில் ஐந்தாவது சந்தேகநபரை கொல்லப்பட்ட இளைஞனின் மனைவி அடையாளம் காட்டியுள்ளார்.

வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த இளைஞன் தனது மனைவியுடன் காரைநகர் பகுதிக்கு சென்று விட்டு, மோட்டார் சைக்கிளில் திரும்பும் வேளை பொன்னாலை பாலத்திற்கு அருகில் உள்ள கடற்படை முகாமிற்கு முன்பாக வைத்து மனைவியுடன் கடத்தி செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் இதுவரையில் 06 பேரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ளவர்கள் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் புதன்கிழமை அடையாள அணிவகுப்பு நடைபெற்ற வேளை, கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 6 சந்தேகநபர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அதன்போது, படுகொலையான இளைஞனின் மனைவி மன்றில் தோன்றி, ஐந்தாவது சந்தேகநபரை அடையாளம் காட்டினார்.

அதனை தொடர்ந்து வழக்கினை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான், அன்றைய தினம் வரையில் ஆறு சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-7,10,33)

## பெண் பொலிஸ் அதிகாரி வாகன விபத்தில் பலி

பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பாரவூர்தி மோதி உயிரிழந்துள்ளதாக மத்துகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையாற்றும் பெண் சார்ஜண்ட் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தொடங்கொட, புஹம்புகொட பிரதேசத்தில் வசித்து வந்த தமயந்தி வீரசூரிய என்ற பெண் உத்தியோகத்தரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் தனது கடமைகளை முடித்துக் கொண்டு பேருந்தில் இருந்து இறங்கி மத்துகமவிலிருந்து களுத்துறை நோக்கிச் செல்லும் வீதியைக் கடக்கும் போதே விபத்தில் சிக்கியுள்ளார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

26



அரசியலுக்கு அப்பாற்பட்டு நிற்போரே உண்மையான தமிழ்த் தலைவர்களாகத் திகழ முடியும் என்றும் அவர் கூறியது பார்வையாளர்களைச் சமாதானப் படுத்தும் விதமாக இருந்தது.

இருப்பினும் இதற்கிடையே திராவிடக் கொள்கைவாதிகள் ஒருபுறமிருக்க மறுபக்கமாக ஆன்மீக உரையாளர் இலங்கை ஜெயராஜ் பல்வேறு மடங்களைச் சேர்ந்த சைவ மடத் தம்பிரான்கள், இளைய ஆதீனங்கள், முஸ்லிம் அறிஞர்கள் என மாநாட்டில் கூடியிருந்தோரிடையே பன்முகத் தன்மை படர்ந்திருந்ததைக் காண முடிந்தது.

இரண்டாம் நாளில் மலேசியப் பிரதமர் அன்வார் இப்ராகிம், மாநாட்டைச் சிறப்பித்தார். மாநாட்டுக்காக தம் அரசாங்கத்தைச் சேர்ந்த மனிதவளத்துறை அமைச்சர் வ.சிவகுமார் தற்போதைய எதிர்க்கட்சியான மலேசிய இந்தியர் காங்கிரசின் இணைத் தலைவர் எம்.சரவணன் ஆகியோர் இணைந்து செயல்பட்டதைப் பாராட்டிய திரு அன்வார் மலேசியாவின் தேசிய ஒற்றுமையை இவ்வாறு வழி நடத்தும் இந்தியச் சமூகத்தைத் தாம் வணங்குவதாகக் கூறினார்.

மாநாட்டுக்கென்றே 1 மில்லியன் ரிங்கிட் தொகையுடன் மலாயா பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வுத் துறைக்கு 2 மில்லியனையும் தமிழ்ப்பள்ளிகள் செயற்படுவதற்காக 2 மில்லியனையும் ஒதுக்கியுள்ளதாக அன்வார் அறிவித்து பலத்த கைத்தட்டலைப் பெற்றார்.

மாநாட்டின் இறுதி நாளில் 'ஐஎஸ்ஐ', 'ஸ்டொர்ப்பர்ஸ்' போன்ற அனைத்துலக ஆய்வுத் தரநிலைகளை எட்டும் ஓர் ஆய்விதழ் இதுவரை தமிழில் வெளிவரவில்லை என்று மாநாட்டின் இணைத் தலைவர் பேராசிரியர் மு.ராஜேந்திரன் கூறினார்.

சீன மொழிக்கு 32 ஐஎஸ்ஐ இதழ்கள் ஹாங்காங்கில் பதிவாகி உள்ளபோது பலமுறை மாநாடு நடத்தியும் தமிழ் மொழியில் ஓர் இதழ்கூட இத்தரநிலையை எட்டவில்லை என்றார். தரமான கட்டுரைகள் வெளிவந்தாலும் தரநிலைப் படுத்தப்படாததால் அவை கானலுக்கு இரைத்த நீரைப்போல் ஆய்வு உலகிற்குத் தெரியாமல் போவதாகக் கூறினார்.

**சிங்கப்பூரிலிருந்து கட்டுரை படைத்த 'அஆஇ'**

சிங்கப்பூரிலிருந்து 75 பேராளர்கள் பங்கேற்றனர். முன்னாள் நியமன பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.தினகரன், தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் மு. அரிகிருஷ்ணன், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் நா. ஆண்டியப்பன், கவிமாலைக் காப்பாளர் மா.அன்பழகன் உள்ளிட்டோரின் ஒருங்கிணைப்பில் இந்தப் பேராளர் குழு கோலாலம்பூர் சென்றிருந்தனர்.

சிங்கப்பூரர்களின் பங்களிப்பு குறித்து தமிழ் முரசிடம் பேசிய துணை அமைச்சர் சரஸ்வதி கந்தசாமி மலேசியாவுக்கு மிக அருகாமையிலுள்ள சிங்கப்பூரர்களை 'தொப்புள் கொடி உறவுகள்' என்று வர்ணித்தார். மாநாட்டின் மீது மலேசியர்கள் காட்டிய ஆர்வம் சிங்கப்பூரர்கள் இடையேயும் தென்பட்டதாகக் கூறும் திருவாட்டி சரஸ்வதி "இரு நாடுகளுக்கு இடையிலான உறவு புதுப்பிக்கப்படுவதாக உணர்கிறேன்" என்றார்.

திரு.அன்பழகன் தமது கட்டுரையில் குர்தியர்களின் மொழி அடையாளத்தைப் பற்றியும் துருக்கியர்களால் அந்த அடையாளம் எதிர்நோக்கும் அபாயத்தைப் பற்றியும் விவரித்தார். இரண்டு வகையினருக்கு இடையே சமயம் பொது என்றாலும் குர்தியர்கள் தாய்மொழியைத் தங்கள் அடையாளத்தின் மையமாக வைத்திருப்பதைத் திரு. அன்பழகன் சுட்டினார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த அல்லது நடந்துகொண்டிருக்கும் பிரச்சினைகள் குர்திஷ் எனும் மொழி பேசும் மக்களுக்கு அன்றும் இன்றும் எவ்வாறு இருந்து வருகின்றன என்பதைத் தமிழர்களுக்குப் புலப்படுத்துவது தம் கட்டுரையின் நோக்கம் என்று திரு.அன்பழகன் கூறினார்.

இக்கட்டுரையின் பகிர்வின்போது குர்தியர்களின் நிலை இலங்கைத் தமிழர்களின் நிலையுடன் ஒப்பிட்டு பேசப்பட்டது. இருந்தபோதும் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினை குர்தியர்களின் சவால்களைத் தாண்டிலும் மிகப் பெரிய அளவில் இருப்பதாக படைப்பைக் கண்டவர்களில் ஒருவரான கனடிய நாட்டு முனைவர் திருமதி.ஸ்ரீதாஸ் கூறினார்.

**சிங்கப்பூரில் இயக்கங்கள் வளர்க்கும் தமிழ்**

நா.ஆண்டியப்பன் படைத்த கட்டுரையில் தமிழ்மொழி சிங்கப்பூரில் அதிகாரத்துவ மொழியாக அங்கீகாரம் பெற்றது எப்படி சிங்கப்பூரில் தமிழ்ப்புழக்கத்தை வளர்க்கும் இயக்கங்கள் யாவை அவற்றை நிறுவிய தலைவர்களும் தற்காலத் தலைவர்களும் யாவர் என்பவற்றைப் பட்டியலிடும் படைப்பாக அமைந்தது.

பல்வேறு கலாசாரங்களின் சங்கமமாக விளங்கும் சிங்கப்பூரில் இந்த இயக்கங்களின் பணி சுலபமன்று எனத் தம் படைப்பின் முடிவில் குறிப்பிட்ட ஆண்டியப்பன் இம்முயற்சிகளுக்கு உயிரோட்டம் தருவது அரசாங்க நிதியுதவி என்றும் கூறினார். தமிழ் பேசப்படாவிட்டால் தமிழுக்குத் தரப்படும் சலுகைகள் மறையும் அபாயம் ஏற்படும் என்ற எச்சரிக்கையுடன் தம் படைப்பை நிறைவு செய்தார்.

**சிங்கப்பூரில் தமிழரும் தமிழர்களும்**

சிங்கப்பூரின் தமிழ் மக்களின் மொழிசார்ந்த சிந்தனை மற்றும் சித்தாந்தங்களை விளக்கும் ஒரு கட்டுரையைப் படைத்தார். சிங்கப்பூரைச் சேர்ந்த படைப்பாளர்களில் ஒருவரான இரத்தின வேங்கடேசன் பல மொழிகளைக் கேட்டு வளர்ந்த சிங்கப்பூரில் தமிழர்கள் தமிழகத்தில் உள்ள பல தமிழர்களுக்கு மாறாக தங்களுக்குத் தெரிந்த மொழிகளைத் தனிப் பாணியில் அணுகுவதாகக் கூறினார். காலப்போக்கில் சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் தமிழ் மேலும் தூய்மையாகி சிறப்பாக இருப்பதையும் தம் ஆய்வில் குறிப்பிட்டார்.

மலேசியாவில் மலாய் மொழி, சிங்கப்பூரில் ஆங்கில மொழி என்ற ஆதிக்கம் இருந்தாலும் அந்நாடுகளின் தமிழ் மக்கள் மொழிக் கலப்படத்தைத் தவிர்த்து தமிழ் பேசி வருவது சிறப்பாக எடுத்துக்கூறப்பட்டதாக துணை அமைச்சர் சரஸ்வதி குறிப்பிட்டார்.

**சிங்கப்பூரில் 150 ஆண்டுகள் தமிழ் வளர்த்த தமிழ் முஸ்லிம்கள்**

தமிழவேள் நற்பணி மன்றத்தின் செயலாளர் எம். இலியாஸ் படைத்த கட்டுரை சிங்கப்பூரின் 150 ஆண்டுகால தமிழ்ப்புழக்க வரலாற்றுக்கு தமிழ் முஸ்லிம் அளித்த பங்கினை இயம்புகிறது. தமிழ் முஸ்லிம்கள் அமைத்த வழிபாட்டுத் தலங்கள், இயற்றிய நூல்கள், நடத்திவரும் சஞ்சிகைகள் போன்ற விவரங்கள் பகிரப்பட்டன. எழுத்துத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதித்த இந்த சமூகத்தினரைப் பற்றியும் கட்டுரையில் விளக்கப்பட்டது.

இலியாஸின் படைப்பைக் கேட்டிருந்தோரில் ஒருவரான மலேசிய தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் ப.கு.சண்முகம் 1800களில்கூட தமிழ் புத்தகங்கள் வெளிவந்திருப்பதை அறிந்து வியப்படைந்தேன். அப்போதிலிருந்து சிங்கப்பூரில் தொடங்கியது தமிழ்ப் பணி கேட்கும்போது பெருமையாக உள்ளது என்று கூறினார்.

**வேற்றினப் பேச்சாளர்கள்**

மாநாட்டின் முதல் நாளில் மேடை ஏறிய மூன்று வேற்றினப் பேச்சாளர்கள் பரிமாறிய தகவல்கள் புதுமையாக இருந்தன.

தமிழ் மொழியில் பேசி காணொளிகளை இணையத்தில் பதிவேற்றம் செய்யும் (சீனர்) சீனாவைச் சேர்ந்த நிலானி, 'ரோஜாவே தமிழ் பேசு' என்ற வைரமுத்துப் பாடல் ஒன்றைப் பாடி உரையைத் தொடங்கினார். "மிக தொன்மையான, மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படும் இரண்டு மொழிகளைக் கற்றிருக்கிறேன். ஒன்று சீன மொழியான என் தாய்மொழி. மற்றொன்று தமிழ் மொழி," என்று கூறி பார்வையாளர்களின் கவனத்தைத் தன்வசப்படுத்தினார்.

2007ஆம் ஆண்டு சீனாவின் தொடர்புத்துறைபல்கலைக்கழகத்தில் பட்டக்கல்விக்காக நான்கு ஆண்டுகளாக அடிப்படையான தமிழ் மொழியைக் கற்றார் திருவாட்டி நிலானி. தமிழ் உணவு உள்ளிட்ட கலாசாரக்கூறுகளைக் காண்பிக்கும் சமூக ஊடகக் காணொளிகளையும் வெளியிடும் திருவாட்டி நிலானி தமிழ் தமக்குப் பாலமாகவும் செல்வமாகவும் திகழ்வதாகக் கூறினார்.

நிறைமதி என்ற மற்றொரு சீனர் உரையாற்றினார். சீனாவின் தென்மேற்கு நகரிலுள்ள கும்மிங் பல்கலைக்கழகத்தின் தமிழ் துறையில் இவர் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். சீனாவில் தாம் பயன்படுத்தும் அடிப்படைத் தமிழ் பாடநூலைப் பார்வையாளர்கள் முன்னிலையில் பகிர்ந்தார்.

அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த ஜப்பானியரான தாமஸ் ஹிட்டோஷி புருக்ஸ்மா தம் திருக்குறள் மொழி பெயர்ப்பு குறித்து பகிர்ந்துகொண்டார். திருக்குறள் பலமுறை மொழி யாக்கம் செய்யப்பட்டாலும் திருக் குறள் இதுவரை 'ஆங்கிலத்தில் திருக்குறளாக வெளிவரவில்லை' என்றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை...

ஏற்பட்டுள்ளது.

சிறிது நேரத்தில் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும் தீ விபத்தில் குறித்த கடை முழுவதுமாக எரிந்து சேதமடைந்துள்ளது. (ம-7,10,33)

## சர்வதேச...

டாவது சர்வதேச இந்து மாநாடு (IHC) - 2023 இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளதுடன் குறித்த மாநாட்டில் 54 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்து கற்கைகள் பீடச்சபையின் ஏகோபித்த ஆதரவுடன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து தேகாந்த நிலையை அடைந்த அமரர் கு.நகுலேஸ்வர குருக்களுக்கு மெய்ப்பொருள் விருதும், சைவ சமூக பணியாற்றும் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனுக்கு ஞானவாய்ச்சியன் விருதும், இலங்கையில் இந்து பண்பாட்டுக்கு உழைக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு சிவநிதி விருதும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டில் இந்த ஆய்வு மாநாடு நடைபெறவுள்ளமை விசேட அம்சமாகும். (ம-7,10)

## வெடுக்குநாறி...

குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மகாசிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,10)

## இளவாலை...

ஜூட் (வயது-36) மற்றும் நாவற்குழியைச் சேர்ந்த சிவநேசன் திவ்யன் (வயது-21) என்ற இருவருமே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

ஆரியகுளம் பகுதியில் உள்ள விடுதி ஒன்றுக்கு வவுனியாவைச் சேர்ந்தவர் விருந்தினராக வந்துள்ளார்.

அந்த விடுதியின் உரிமையாளரும், அங்கு பணி புரியும் இளைஞர் ஒருவரும், குறித்த விருந்தினரும் நேற்று மாலை இளவாலை சேந்தாங்குளம் கடலில் குளிப்பதற்கு சென்றுள்ளனர்.

இந்நிலையில் ஒருவர் நீரில் மூழ்கிய நிலையில், அவரைக் காப்பாற்றுவதற்கு மற்றையவர் முயன்ற சமயம் அவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,33)

## அநுர...

குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரதானமான இரு மக்கள் சந்திப்புக்களின் முதலாவது சந்திப்பு எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கனடாவின் ரொரன்டோ நகரில் இடம்பெறுமென ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இரண்டாவது சந்திப்பு 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வான்கூவர் நகரிலும் இடம்பெறவுள்ளது.

குறித்த மக்கள் சந்திப்புகளுக்கு மேலதிகமாக கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர் மற்றும் முஸ்லிம் மக்களுடன் சகோதரத்துவ சந்திப்புகளிலும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க பங்கேற்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7,10)

## நம்பிக்கை...

மன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபாநாயகர் அந்த பதவிக்கான கௌரவத்தை கருத்திற்கொண்டு பதவியில் இருந்து விலக வேண்டும்.

ஏனென்றால் சபாநாயகர் தொடர்பில் கொண்டிருந்த நம்பிக்கை முற்றிலும் இல்லாமல் போயுள்ளது.

இணையவழிபாதுகாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் ஊடாக சபாநாயகர் அரசியலமைப்பை மீறியுள்ளார்.

எமது நாட்டின் அரசியலமைப்பில் சபாநாயகருக்குரிய கௌரவம் மற்றும் நம்பிக்கை தொடர்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (ம-7,10)

## ரணில் அரசுக்கு...

பொருட்களின் விலையேற்றம், வரிச்சுமை, வெளிநாட்டு ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பல பிரச்சினைகளை முன்வைத்து முன்னிலை சோசலிசக் கட்சி மற்றும் பொதுமக்கள் இணைந்து கொழும்பில் நேற்று இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டக்காரர்கள் புறக்கோட்டையை நோக்கி நகர்ந்தபோது, பொலிஸார் கூட்டத்தை கலைக்க நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினர்.

இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது. இந்தப் போராட்டத்தின் போது சிலரின் ஆடைகள் களையப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

இதனால் அங்கு பெரும் பதற்ற நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## ஜனாதி...

உள்ளடங்கலாக முக்கிய நிகழ்வுகளிலும் பொது மக்கள், அதிகாரிகளுடனான கலந்துரையாடல்களிலும் பங்கேற்கவுள்ளார்

அந்தவகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு திறந்து வைக்கப்படவுள்ளது

இந்த சிகிச்சைப் பிரிவில் அவசர சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, ஐந்து சத்திர சிகிச்சைக் கூடங்கள், சிறுநீரக நோயாளர்களுக்கான குருதி சுத்திகரிப்பு பிரிவு, சி.ரி. ஸ்கானிங் உட்பட்ட கதிரியக்கப் பிரிவு, சிறுவர்களுக்கான சிகிச்சைப் பிரிவு நோயா விடுதிகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் இராணுவ உயர் பாது காப்பு வலயம் அமைந்துள்ள வயா விளான் பகுதி ரெயிலர் கடை சந்திப் பகுதியில் காணிவிடுவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன் மீள்குடியேற்ற காணி விடுவிப்பு பத்திரமும் காணி உரிமையாளருக்களுக்கு ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்படவுள்ளது.

அத்தோடு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அரச காணிகளில் வசிப்போருக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு, விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களம் உருவாக்கிய மென்மொருள் அங்குரார்ப்பணம் என்பனவும் ஜனாதிபதியின் யாழ்.வருகையின்போது இடம்பெறவுள்ளது. (ம-7,10)


தன நிதானய
திகதி - 2024.03.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1455
L 20 24 61 81 L
50592

மஹஜன சம்பத
திகதி 2024/03/20
சீட்டிழுப்பு இலக்கம் 5425
0 4 8 0 5 1 6
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 20/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1773
N 25 02 11 35 77
17837

லக்கி 7 VIP
திகதி 2024.03.20
சீட்டிழுப்பு இலக்கம் 0251
D 0 0 8 9 6 8 D
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3667
சீட்டிழுப்பு திகதி 20.03.2024
M 12 28 29 72
M 95655
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.20
சீட்டிழுப்பு இலக்கம் 0734
கடகம் 19 43 47 52 கடகம்
39009 17

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.03.2024 வெற்றி வாரம் 133 வர்ணம் பச்சை
T 5 8 3 4 3 0 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,558,720.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2399 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 20.03.2024 தினம் புதன்கிழமை
03 14 42 64 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,342,050.40

சனிதா
திகதி 2024.03.20 வெற்றி வாரம் 4560
14 32 52 71 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,634,832.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4111 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.03.20 தினம் புதன்கிழமை
09 13 28 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 12,821,688.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 19 07 32 52 61
1575 20.03.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 513,045,569.80
DLB 011-2 333 546-47

ஜயோதா Jayoda
திகதி 2024.03.20 வெற்றி வாரம் 2010 வர்ணம் மஞ்சள்
06 08 33 41 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,597,310.80

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2225
சீட்டிழுப்பு திகதி: 2024.03.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 100,476,056/-
01 06 22 52 X


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (160)

076 825 7716 (ஆகாஸ்)


# ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கிய மாற்றத்தை எதிர்பார்க்கின்றோம்

## ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

நாட்டில் பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தி விரைவில் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கிய மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவற்றுக்குத் தேவையான சட்டத்தை ஏப்ரல் மாதமளவில் பாராளுமன்றத்தில் சமர்பிக்க எதிர்பார்த்திருப்பதாகவும், அரசாங்கத்தின் நிதி நிர்வாகம் தொடர்பிலான புதிய சட்ட மூலமும் அதனுடன் சமர்பிக்கப்பட உள்ளதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

கேகாலை மங்கெதர டெம்பிட்டி புராதன பிரிவெனா விகாரையில் புதிதாக அமைக்கப்பட்ட தங்க வேலியை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கடனைச் செலுத்தக்கூடிய நாடு என்பதை மீள உறுதிப்படுத்துவதற்கு அவசியமான பேச்சுவார்த்தைகளை ஜூன், ஜூலை மாதத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும், அதன் பின்னர் இது வரையில் எமக்குக் கிடைக்காமலிருக்கும் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அது மட்டுமன்றி, இலங்கையுடன் வர்த்தகம் செய்வதிலிருந்து விலகியிருந்த வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் மீண்டும் கொடுக்கல் வாங்கல் செய்ய ஆரம்பிக்கும் என்றும் அதனால் நாட்டில் வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரித்து, நாட்டின் பொருளாதாரம் வலுவடையும் என்றும், அதனூடாக மக்களுக்கு மேலும் பல சலுகைகளை வழங்க முடியுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் குறித்து கலந்துரையாடி விரைவில் அந்த பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தற்போது ரூபாவின் பெறுமதி வலுவடைந்திருக்கும் நிலையில் ஜூன் மாதமளவில் டொலரின் பெறுமதி 280 ரூபா வரை வீழ்ச்சியடைந்து ரூபாவின் பெறுமதி வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் பொருட்களின்விலை குறைவடையும். அடுத்த வருடத்தில் ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடையுமென எதிர்பார்க்கிறோம் என்றார். (ம-7.10)


## மணப்பெண் தேவை

- வடலியடைப்பு - மாவிட்டபுரம் இந்து, கௌரவகுலம், 1990, விசாகம், BSc, MBA, Consultant மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
- யாழ்ப்பாணம் Town - கொக்குவில், இந்து, கௌரவகுலம், 1988, அனுஷம், MBBS (Jaffna) Doctor மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
- காரைநகர், இந்து, கௌரவகுலம், 1986, சித்திரை, BSc In Information and Communication Technology, UK citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
- சண்டிலிப்பாய் - தெல்லிப்பழை, இந்து, கௌரவகுலம், 1988, பூரட்டாதி, MBA, Financial Analyst, Canada citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவகுலம், 1986, திருவோணம், BA(Hons) Accounting and Finance, CIMA, UK Citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
- அச்சுவேலி, இந்து, கௌரவகுலம், 1990, சதயம், Software Engi., USA Citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
- கரணவாய் - திருகோணமலை, இந்து, கௌரவகுலம், 1979, ரேவதி, BSc, Masters, UK Citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
- மல்லாகம் - உடுவில், இந்து, கௌரவகுலம், 1984, சுவாதி BSc, Masters in statistics, USA Citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
- காரைநகர், இந்து, கௌரவகுலம், 1986, உத்தராடம் Airspace Engineering, USA Citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
- புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம், 1979, விசாகம், CIMA, Business Administration, UK citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவகுலம், 1986, சித்திரை, BSc in Information and Communication Technology, UK citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
- மாதகல் - கோப்பாய், இந்து, கௌரவகுலம், 1981, பூராடம், BSc Computer Science, UK Citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.

(155)

S.Sharma J.P Astrologer
077 539 3728
077 803 8193

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறைச் சந்தி அருகில் கடற்கரை வீதி ஹெலன் தோட்டத்தில் ஒன்றேகால் (1 1/4) பரப்பு உறுதிக் காணி விற்பனைக்குண்டு. விலை 2,300,000 (இருபத்திமூன்று இலட்சம்) விலை பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு உரிமையாளர் இல. (0157)

074 006 0269

## மணமகள் தேவை

யாழ். இந்து, கௌரவகுலம், 1988, உத்தரம், 12 இல் செவ்வாய், பெற்றோலிய கூட்டுத்தாபன பாதுகாப்பு உத்தியோகத்தர் (OIC) மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு (0142)

077 367 1062

## விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு : (0137)

074 17 37 684

## IELTS 23.03.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes


இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

077 798 9830 By:-B.MURALI (153)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

O/L மாணவர்களுக்கான விசேட group ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1936 · 09 · 28

மறைவு 2023 · 04 · 03

### அமரர் கனகசபை சண்முகலிங்கம்

(இளைப்பாறிய காசாளர் - ப.நோ.கூ.சங்கம் கொடிகாமம்)

ஆண்டொன்று கடந்தது அப்பா!
ஆனாலும் அகலுமா உங்கள் நினைவலைகள்
ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் - எம்
ஆத்மாவில் கலந்திருக்கும் உங்கள் மூச்சுக்காற்று.

அல்லாரை வடக்கு,
மீசாலை.

(159)

குடும்பத்தினர்
074 12 13 109


## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-

வயது: 21 முதல் 40 வரை

தொடர்புக்கு:- 0777068777 (C-8583)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8583)

## காணி விற்பனைக்கு உண்டு

நெல்லியடி நகரத்தில் 12 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நெல்லியடி நகரத்தில் இருந்து 2Km தூரத்தில்
- விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து 500 m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- பெற்றோல் செற் முன் வீதியில் 2Km தூரத்தில் நெல்லியடி பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்நீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை நாலரை இலட்சம் 450,000/=

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்பு : 071 173 3911, 076 853 5022

(165)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org